“சில்பாலோக்க வேலைத்திட்டம்”

கல்விப் பொது தராதரப்பத்திர (உ/த) பரீட்சைப் பெறுபேற்றை அதிகரித்தல் - 2021

வணிகக்கல்வி

தரம் - 12

சுயகற்றலுக்கான கையேடு

மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி

மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டின் வெற்றியானது தொடர்ச்சியானதாக காணப்படவேண்டுமாயின், அவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவதன் மூலமே சாத்தியமாக அமையும். மாணவர்களின் அடைவு மட்டத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமாயின் சுயகற்றலில் ஈடுபடுவது அத்தியாவசியமாகும். தம் கற்றல் செயற்பாட்டை முகாமை செய்யும் திறனை வளர்த்துக் கொள்வதற்கு, தனிப்பட்ட உந்துதல் அவசியமாவதுடன் இந்த நவீன உலகின் முன்னுரிமை வழங்க வேண்டிய விடயமும் அதுவே ஆகும்.

கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிலிருந்து உலக மக்களது செயற்பாடுகள் பல்வேறு சவால்களுக்கு உள்ளாகியுள்ளன. எனவே அனைத்து மானிட செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளோம். அந்தவகையில் மாணவர்களது கற்றல் செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தி மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில் மத்திய மாகாணத்தின் க.பொ.த (உ/த) மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நவீனமயப்படுத்தி, ஓர் உயர்ந்த அடைவு மட்டத்திற்கு மாணவர்களை இட்டு செல்வதற்காக இந்த கையேட்டுத் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய உங்கள் கல்வி செயற்பாட்டை வடிவமைத்துக் கொள்வதுடன், இச்செயற்பாட்டிற்கு பிள்ளைகளுக்கு துணைப்புரிவதற்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்விக் காரியாலயம், கோட்டக்கல்விக் காரியாலயம் மற்றும் பாடசாலை சமூகம் போன்றோர் எந்த நேரத்திலும் தயார் நிலையிலுள்ளார்கள் என்பதை உங்களுக்கு மிக மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் உங்களது சுயகற்றல் செயற்பாட்டிற்காக ஆசிரியர் குழாம், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோர் இது ஒரு முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய பொறுப்பு என்பதை அறிந்துள்ளதுடன் அதற்காக எந்த நேரத்திலும் உதவுவதற்கு தயாராக உள்ளனர் என்பதையும் அறியத்தருகின்றேன். மேலும் 2021 ஆம் ஆண்டின் க.பொ.த (உ/த) மாணவர்களுக்காக இக்கற்றல் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து வரும் உங்களது சகோதர சகோதரிகளும் பயன்படுத்தி பயன்பெற முடியும்.

இந்த கற்றல் தொகுதியானது, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பயன்படுத்தும் போது உங்களது உயர்கல்விக்கு உறுதுணையாக அமையும் என கருதுகின்றேன். மத்திய மாகாணத்தின் அடைவு மட்டத்தை உயர்த்தும் முன்னுரிமை வேலைத்திட்டமான “ சில்பாலோக்க” வேலைத்திட்டத்தின் கீழ் இச் செயற்றிட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக நிதியுதவி வழங்கியதுடன் ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்கிய மத்திய மாகாணத்தின் பிரதான செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த கற்றல் தொகுதியை வடிவமைப்பதற்கு பல்வேறு வகைகளிலும் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்களது எதிர்காலத்தின் கனவு நனவாக எனது நல்லாசிகள்.

E.P.T.K. ஏக்கநாயக்க,
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் Covid 19 இன் பரவல் ஆரம்பித்த உடன் பிள்ளைகளை இப்பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் முகமாக 2020 March 12ம் திகதியளவில் மூடப்பட்ட பாடசாலைகள் இன்று வரை தமது வழமையான செயற்பாடுகளுக்கு திரும்ப முடியாத நிலையிலேயே உள்ளன.

இந்நிலையை ஓரளவேனும் ஈடு செய்யும் முகமாக மத்திய மாகாணக் கல்வி திணைக்களமானது இணையம், தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி போன்ற டிஜிட்டல் தளங்களூடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி செய்து வருகிறது. எனினும் இந்த டிஜிட்டல் வளங்களை அணுகும் சந்தர்ப்பங்கள் அனைத்து மாணவர்களுக்கும் சீராக அல்லது ஒரே மாதிரியாக அமையாமலிருப்பது எமக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது.

எனவே 2021ல் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி இக்கற்றல் துணையேடு சகல பாடங்களுக்குமாக தயாரிக்கப்பட்டு மென் பிரதிகளாக பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக வழங்கப்படுகிறது. ஆர்வம், விடாமுயற்சி, இலக்கு நோக்கிய பயணம் என்பன நமது சமூக எழுச்சிக்கான அடிப்படையான கல்வி சார் நடவடிக்கைகளாக கருதி இன்று நாம் எதிர் கொள்ளும் சவால்களை வெற்றிகரமாக முகம் கொடுக்க தயாராக வேண்டும்.

எனவே எமது இந்த முயற்சியானது பரீட்சைக்கு உங்களை தயார் செய்து கொள்வதிலும் வெற்றிபெற செய்வதிலும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தவறவிடப்பட்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை சுயகற்றலின் வாயிலாக அடையும் வகையில் இக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவச் செல்வங்கள் இக் கையேட்டினை முறையாக பயன்படுத்தி பரீட்சையில் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

இவற்றை தயாரித்து வடிவமைத்து தந்து உதவிய ஆசிரியர்கள், வளவாளர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. ஆர். சத்தியேந்திரா,
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

கண்காணிப்பும் மேற்பார்வையும்

E.P.T.K ஏக்கநாயக்க
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

A.R சத்தியேந்திரா
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

A.L.M.சாருடீன்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

வழிகாட்டல்

P. விக்னேஸ்வரன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

நூலாக்கம் & கணிணி வடிவமைப்பு
***K.பிரபாகர்** - *SLPS**
மமா/அ/சென்மேரிஸ் கல்லூரி, பொகவந்தலாவ.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

பொருளடக்கம்

தேர்ச்சி மட்ட இல	தேர்ச்சி மட்டங்கள்	பக்கம்
1.0	வணிக அடிப்படைகளையும் வணிகங்கள் செயற்படுகின்ற சூழலையும் தேடியறிவார்.	**6**
1.1	வணிக எண்ணக்கருவைப் பகுப்பாய்வு செய்வார்.	**6**
1.2	வணிகங்களது பரம்பலையும் அதன் போக்குகளையும் அறிந்து கொள்வார்.	**14**
1.3	பல்வேறு நியதிகளின் அடிப்படையில் வணிகங்களை வகைப்படுத்துவார்.	**18**
1.4	வணிகங்கள் உள்ளீட்டு, வெளியீட்டுச் செயன்முறையொன்றாகுமெனப் பகுப்பாய்வு செய்வார்.	**22**
1.5	வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் வணிகம் தொடர்பாக அக்கறை செலுத்துவதற்கான காரணங்களைக் கேட்டறிவார்	**24**
1.6	வணிகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் வணிகச்சூழலை வகைப்படுத்திக்காட்டுவார்.	**26**
1.7	வணிகத்தின் அகச்சூழல் காரணிகளினால் வணிகங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பகுத்தாய்வார்.	**28**
1.8	வேலைச்சூழற்(அண்மிய) காரணிகள் வணிகங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பகுப்பாய்வு செய்வார்.	**31**
1.9	பேரினச் சூழற் காரணிகள் வணிகங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பகுப்பாய்வு செய்வார்.	**32**
2.0	வணிகச் சூழலுக்கு இயைபாக்கமடைவதற்கு வணிகமானது சமூகரீதியான பொறுப்புக்கள், விழுமியங்கள் மீது கவனம் செலுத்தும் முறையினைக் கேட்டறிவார்.	**35**
2.1	வணிகங்களினால் சமூகரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை மதிப்பார்.	**35**
2.2	சூழலை நேசிக்கக்கூடியதாகக் கருமமாற்றி நிலைபேறான அபிவிருத்திக்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறையை மதிப்பார்.	**37**
2.3	வணிகங்களின் வெற்றிக்கு ஒழுக்க விழுமிய முறைமையொன்றின் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்துவார்.	**41**
4.0	பல்வேறு வணிக அமைப்பு வகைகளையும் அவற்றை முறையாக ஆரம்பித்து நடத்திச் செல்வதற்கான தேவைப்பாட்டினையும் உறுதிப்படுத்துவார். – பயிற்சிகள்	**48**

தேர்ச்சி 1.0 வணிக அடிப்படைகளையும் வணிகங்கள் செயற்படுகின்ற சூழலையும் தேடியறிவார்.

தேர்ச்சி மட்டம் 1.1 வணிக எண்ணக்கருவைப் பகுப்பாய்வு செய்வார்.

வணிகம் - வரைவிலக்கணம்

இலாபத்தைப் பெறும் நோக்கில் நடத்திச் செல்லப்படும், மனிதத் தேவைகள்,விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான பொருள்கள், சேவைகளை உற்பத்தி செய்தல், விநியோகித்தல், சந்தைப்படுத்தல் என்பவற்றுடன் இணைந்த அனைத்து நடவடிக்கைகளும் வணிகம் எனப்படும்.
இலாப நோக்கின்றி மனிதத் தேவைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக நடத்திச் செல்லப்படுகின்ற வணிகங்களும் காணப்படுகின்றன.
வணிகத்திற்கு அடிப்படை வாடிக்கையாளர்கள் ஆவர்.
வணிகமென்பது மனிதத் தேவைகள், விருப்பங்களை நிறைவு செய்வதற்காகவுள்ள எந்தவொரு பொருளாதார நடவடிக்கையுமாகும்.

வினா - இலாபத்தை ஈட்டாமல் ஒரு வணிகம் எவ்வாறு நிலைத்திருக்க முடியும்

விடை - இலாப நோக்கற்ற வணிகங்களுக்கு பின்வரும் செலவுகள் காணப்படுகின்றன.
உதாரணம் - ஊழியர் சம்பளம், பற்றுச்சீட்டுக்களுக்கான கொடுப்பனவுகள் (**Eg** –மின்சாரம்), ஏனைய செலவுகள் இவற்றினை ஈடு செய்வதற்காக பின்வரும் வழிகளில் வருமானம் ஈட்டுவதன் மூலம் நிலைத்திருக்கின்றன.
உதாரணம் - அங்கத்தவர் சந்தா, நன்கொடைகள், அரச மானிய உதவிகள், நிதி திரட்டும் நடவடிக்கைகள் (**Eg**- கலைநிகழ்ச்சிகள்,உள்நாட்டு வெளிநாட்டுஅனுசரணைகள்)

வணிக எண்ணக்கருக்கள்

- **தேவை விருப்பம்**
- **உற்பத்தி**
- **பொருட்கள் சேவைகள்**
- **சந்தை**

வேறுபாடுகள்

தேவைகள்	விருப்பங்கள்
மனிதனால் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய உடல், உள நிலைமைகளே மனிதத் தேவைகள் என்றழைக்கப்படும்.	மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் பல்வேறு முறைகள் விருப்பங்கள் என்றழைக்கப்படும்.
வாழ்வதற்குக் கட்டாயமாக நிறைவு செய்ய வேண்டியது	வாழ்வதற்குக் கட்டாயமாக நிறைவு செய்யத் தேவையற்றது
சகலருக்கும் பொதுவானது,	தனிநபர்களுக்கிடையில் வேறுபட்ட தாகக் காணப்படும்.
வரையறைக்குட்பட்டது	வரையறுக்கப்படாமை
வணிகங்களினால் தோற்றுவிக்க முடியாது	வணிகங்களினால் தோற்றுவிக்க முடியும்
சமூகத் தாக்கங்களினால் மாற்றம் செய்ய முடியாது	சமூகத் தாக்கங்களினால் மாற்றம் செய்ய முடியும்

உதாரணம்

தேவைகள்	விருப்பங்கள்
உணவு	சோறு, பாண், இடியப்பம், தேநீர்
உடை	சேலை, காற்சட்டை, சட்டை, வேட்டி
வீடு	மாடிவீடு, விடுதி, குடிசை, உத்தியோகபூர்வ இல்லம்
கல்வி	பாடசாலைக்கல்வி, பிரிவெனாக்கல்வி, தனியார் பாடசாலை, பாடவிதானம், நூல்கள்
சுகாதாரம்	அரச வைத்தியசாலை, தனியார் வைத்தியசாலை, மருந்துவகை, வைத்தியப் பரிசோதனை
தொடர்பாடல்	தொலைபேசி, தொலைநகல், மின்அஞ்சல், வலையமைப்பு வசதிகள்
பாதுகாப்பு	பொலிஸ்படை, இராணுவப் பாதுகாப்புப்படை, தனியார் துறையின் பாதுகாப்புச் சேவை

உற்பத்திப் பொருள்

மனித தேவை விருப்பங்களை பூர்த்தி செய்வதற்காக சந்தைக்கு வழங்கப்படும் பெறுமதியுடைய எதுவும் உற்பத்திப் பொருள் எனப்படும்

உற்பத்திப் பொருள்களாவன.

பொருட்கள் } பிரதானமானவை
சேவைகள் }
எண்ணங்கள்
இடம்
நிகழ்வு
செயற்பாடு
ஒழுங்கமைப்பு
தனிநபர்

வேறுபாடுகள்

பொருள்கள்	சேவைகள்
பௌதிக நிலைப்புத் தன்மை உடையது (தொட்டுணரக்கூடியது)	பௌதிக நிலைப்புத் தன்மையற்றது (தொட்டுணர முடியாது)
களஞ்சியப்படுத்த முடியும்	களஞ்சியப்படுத்த முடியாது.
ஓரினத்தன்மை கொண்டதாக இருக்குமாறு உற்பத்தி செய்ய முடியும்.	வழங்குனர்களுக்கேற்ப வேறுபடும்
வழங்குனரிடமிருந்து பிரிக்க முடியும்	வழங்குனரிடமிருந்து பிரிக்க முடியாது.

சந்தை

கொள்வனவாளரும் விற்பனையாளரும் சந்திக்கின்ற அல்லது தொடர்புபடும் எந்தவொரு நிலைமையும் ‘‘**சந்தை**’’ என அழைக்கப்படும்.

மனிதத் தேவைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காகச் சந்தையினூடாகப் பொருட்கள், சேவைகள் வழங்கப்படுகின்றன.

வினா – சந்தை இடம் சந்தை வெளி என்பற்றை விளக்குக. அவற்றுக்கிடையிலான ஒற்றுமைகள், வேற்றுமைகளைக் குறிப்பிடுக.

விடை – சந்தை இடம் - கொள்வனவாளரும் விற்பனையாளரும் நேருக்கு நேர் சந்திக்கும் இடமாகும். குறிக்கப்பட்ட இடங்களில் இவற்றைக் காணலாம். ஒரு விற்பனை நிறுவனம் சந்தை இடமாகும்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

சந்தை வெளி - இலத்திரனியல் வணிகத்தின் ஊடாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் முறையே சந்தை வெளியாகும். நவீன தொழிநுட்பத்தின் காரணமாக இலத்திரனியல் ஊடாக விபரங்களை பெறுவதுடன் அதனூடாகவே சகல கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ளலாம்.

ஒற்றுமை

- பரிமாற்றங்கள் நடைபெறும்
- இரண்டு தரப்பினர் அல்லது அதற்கு மேற்பட்டோர் காணப்படல்
- மனித தேவைகள், விருப்பங்கள் பூர்த்தி செய்தல்.

வேறுபாடுகள்

சந்தை இடம்	சந்தை வெளி
பௌதீக ரீதியான இடம் காணப்படும்	பௌதீக ரீதியான இடம் காணப்படாது
இலத்திரனியல் ஊடாக வணிகம் நடைபெறாது	இலத்திரனியல் ஊடாக வணிகம் நடைபெறும்
வரையறுக்கப்பட்ட குறுகிய சந்தை	பரந்த சந்தை
பெரும்பாலும் சட்டப்பணம் பயன்படுத்தப்படும்.	இலத்திரனியல் பணம் பயன்படுத்தப்படும்

வணிகங்களில் காணப்படும் பண்புகள்

வணிகப் பண்புகள்	விளக்கம்
விற்பனை அல்லது பரிமாற்றம் இடம்பெறல்.	• வணிக நடவடிக்கைகள் அனைத்தும் பொருட்கள் சேவைகளின் பணரீதியான பெறுமானத்தின் அடிப்படையில் விற்பனை அல்லது பரிமாற்றம் இடம்பெறும். • பொருள்கள், சேவைகளை விலையின் அடிப்படையில் கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும் இடம்பெறுவதானது வணிகங்களின் அத்தியாவசியமான காரணியொன்றாகும். • அவ்வாறு விற்பனை அல்லது பரிமாற்றம் இல்லாதபோது வணிக நடவடிக்கைகள் இடம்பெறாது. உதாரணமாக வீடொன்றில் குடும்பத்திற்காக உணவு தயாரித்தல் வணிகமொன்றாகக் கருதப்படுவதில்லை என்பதுடன் குறிப்பிட்ட விலையில் ஏனையோருக்கு விற்பனை செய்வதற்காக உணவுதயாரித்தல், விற்பனை செய்தல் என்பன வணிகமாகக் கருதப்படும்.
பொருள்கள், சேவைகளில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறல்.	• அனைத்து வணிகங்களும் ஏனையோர்களுக்கு விற்பனை செய்வதற்காக பொருள்கள், சேவைகளை உற்பத்தி செய்தல் அல்லது கொள்வனவு செய்தலை மேற்கொள்கின்றன. அவை நுகர்வுப் பொருள்களாக அல்லது கைத்தொழில் (வணிகம்) பொருள்களாக இருக்க முடியும். இறுதிப் பயன்பாட்டிற்காக நுகர்வோன் கொள்வனவு செய்யும் பாண், ஆடை, பாதணிகள் என்பன **நுகர்வுப் பொருள்களாகும்.** • **கைத்தொழில் பொருள்கள் / வணிகப் பொருள்கள்** என்பது நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்கள், இயந்திரங்கள் என்பனவைகளாகும். மின்சாரம், காப்புறுதி, வங்கி என்பன சேவைகளுக்கான உதாரணங்களாகக் குறிப்பிட முடியும்.

தொடர்ச்சியாகக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறல்.	• தொடர்ச்சியான அடிப்படையில் பொருள்கள், சேவைகளின் கொடுக்கல், வாங்கல்கள் இடம்பெறுமாயின் அதனை வணிகம் எனக் குறிப்பிடலாம். • ஒரு கொடுக்கல் வாங்கல் மாத்திரம் மேற்கொள்ளப்படுமாயின் அது வணிகமல்ல. உதாரணமாக தனிநபரொருவர் தான் பயன்படுத்திய பழைய மோட்டார் சைக்கிளை விற்பனை செய்தல் வணிகமல்ல. எனினும் அவர் தொடர்ச்சியான ஒரு அடிப்படையில் மோட்டார் சைக்கிள் விற்பனையினை மேற்கொள்வாறாயின்அது வணிகமாகும்.
இலாபத்தினால் ஊக்கப்படுத்தப்படல்.	• வணிகமொன்றின் அடிப்படை நோக்கம் பணம் உழைப்பதும் செல்வம் சேர்ப்பதுமாகும். இதற்கமைய வணிகமொன்று ரூபா சதங்களினால் பெறப்படும் இலாபம் செலவை விடக்கூடிய வருமானம், வணிகக் கருமங்களைக் கட்டியெழுப்புதல், வணிக வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல், சமூக நலன்களைப் பெற்றுக் கொடுத்தல் என்பன உள்ளடங்கும். • இதனடிப்படையில் வணிகத்துறையில் இலாபத்தை நோக்காகக் கொண்டிருப்பதைப் போன்றே இலாபத்தை நோக்காகக் கொள்ளப்படாத ஆயினும் மேலே குறிப்பிடப்பட்டவாறு அனுகூலங்களை நோக்காகக் கொண்ட வணிகங்களும் காணப்படுகின்றன. எனவே வணிக மொன்றின் விருத்திக்கும் விரிவாக்கத்திற்கும் இலாபம் அவசியமானதாக இருக்கின்றது.
நட்ட இடர் காணப்படல்.	இலாபத்தைப் பெறுவதற்காகக் காணப்படுகின்ற நிச்சயமற்ற தன்மை, நட்டம் ஏற்படக்கூடிய நிலைமை போன்றவற்றுக்கு வணிகங்கள் முகங் கொடுக்க வேண்டி ஏற்படும். எதிர்காலம் நிச்சயமற்றிருத்தல், வணிகச் சூழலில் ஏற்படும் மாற்றம், இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் **வணிகத்தால் கட்டுப்படுத்த முடியாத இடர்கள் பல உண்டு அவைகளாவன** ➢ நுகர்வோனின் சுவை, வடிவம், கேள்வி என்பவற்றில் ஏற்படும் மாற்றங்கள். ➢ இயந்திரங்கள், உபகரணங்கள், உற்பத்தித் தொழினுட்பம் என்பவற்றில் ஏற்படும் மாற்றங்கள். ➢ சந்தையின் போட்டித்தன்மை அதிகரித்தல். ➢ மூலப்பொருள்கள் பற்றாக்குறை, மின்சாரம் தடைப்படல், எரிபொருள் பற்றாக்குறை என்பன ஏற்படுதல். ➢ பணியாளர்களின் பிரச்சினைகள், வேலைநிறுத்தம் ➢ தீப்பிடித்தல், கள்வர் பகைவர் இடையூறுகள், விபத்துக்கள் போன்ற அழிவுகள் ➢ வணிகத்தின் வளப்பாவனை தொடர்பிலான முகாமையின் பிழையான தீர்மானம்.
பொருளாதாரக் கருமமொன்றாக இருத்தல்.	• அருமையாகக் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி பொருள்கள், சேவைகளை உற்பத்தி செய்தல், விநியோகித்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் காரணமாக வணிகம் பிரதானமான பொருளாதாரக் கருமமொன்றாகக் கருதப்படும். இது பணத்தைச் உழைக்கும் நோக்கத்தில் இடம் பெறுவதொன்றாகும். • வணிகங்கள், பொருள்கள், சேவைகளை விற்பனைசெய்தல், அருமையான வளங்களைப் பயன்படுத்துதல் போன்ற கருமங்களில் ஈடுபடுவது பொருளாதாரநடவடிக்கையாக கருதப்படும்.

விருப்பங்களைத் தோற்றுவித்தல்.	• மனித விருப்பங்களை நிறைவு செய்வதற்காகப் பொருள்களை உற்பத்தி செய்வதில் வணிகங்கள் ஈடுபடுகின்றன. சில வணிகங்கள் மூலப்பொருள்களை முடிவுப்பொருளாக மாற்றுவதன் மூலம் மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்கின்றன. • வேறு சில வணிகங்கள் சிலவகைப் பொருள்கள் கூடுதலாகக்காணப்படும் பிரதேசத்திலிருந்து அப்பொருள்களைக் கூடுதலான கேள்வி காணப்படும் பிறிதோர் இடத்திற்குக் கொண்டு செல்வதன் மூலம் மனிதத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. • சில வணிகங்கள் சிலவகைப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் விநியோகிப்பதற்காக அப்பொருள்களின் அறுவடைக் காலங்களில் அவற்றைச் சேகரித்துக் களஞ்சியப் படுத்தி வைப்பதன் மூலம் மனிதத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு சகல வணிகங்களும் பொருள்களை உற்பத்தி செய்தல் சேவைகளை வழங்கல் என்பவற்றினூடாக மனித விருப்பங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

வணிகமொன்றின் பிரதான கருமங்கள் இரண்டாகும்.

- மனிதத் தேவை விருப்பங்களை நிறைவு செய்தல்.
- வளங்களுக்குப் பெறுமதி சேர்த்தல். (சேர்க்கப்பட்ட பெறுமதி)

சேர்க்கப்பட்ட பெறுமதி

பொருளொன்றை அல்லது சேவையொன்றை உற்பத்தி செய்யும் பொழுது பயன்படுத்தப்படுகின்ற வளங்களின் தன்மையில் மாற்றங்களைச் செய்வதன் மூலம் ஏற்படுகின்ற பெறுமதி அதிகரிப்பு சேர்க்கப்பட்ட பெறுமதி எனப்படும்.

வணிகங்கள் வளங்களின் தன்மையில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் காரணமாக அவ்வளங்களின் பெறுமதி அதிகரிக்கும். இவ்வாறு வளங்களுக்குப் பெறுமதியினைச் சேர்த்தல் வணிக மொன்றில் இடம்பெறும் முக்கியமான கருமமொன்றாகும்.

உதாரணம்

மேசை ஒன்றினை உற்பத்திச் செய்யும் போது மரத்தினைப் பெற்றுக்கொள்ளல், பலகைகளை உற்பத்தி செய்தல், மேசையினைத்தயாரித்தல் என்ற வகையில் பல உற்பத்திச் செயன்முறைகள் மேற்கொள்ளப்படும் போது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறிப்பிட்ட பெறுமானம் ஒன்று சேர்க்கப்படுகின்றது

வணிக நோக்கங்கள்

- சந்தையில் நிலைத்திருத்தல்
- இலாபத்தை உச்சப்படுத்தல்
- விற்பனையை உச்சப்படுத்தல்
- சந்தைப் பங்கை அதிகரிக்கச் செய்தல்
- நுகர்வோரின் விருப்பத்தை உச்சப்படுத்தல்
- பங்குகளின் சந்தைப் பெறுமானத்தை உச்சப்படுத்தல்
- வணிகரின் தனிப்பட்ட திருப்தி
- சமூகத்தினதும் மக்களினதும் நலன்
- ஊழியர் நலனோம்புகள்
- நன்மதிப்பையும் பிரதிமையையும் அதிகரித்தல்.
- உற்பத்தித்திறனை அதிகரித்தல்.

பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்களின் பங்களிப்புகள்.

உதாரணம்:

- மாற்றமடையும் சிக்கலான தேவைகளை நிறைவு செய்தல்
- புத்துருவாக்கம்
- தொழில் உருவாக்கம்
- தேசிய பொருளாதார விருத்தி

வினா – க.பொ.த உயர்தரத்தில் வணிகக்கல்வி பாடத்தின் முக்கியத்துவம் யாது?
விடை

- இன்றைய உலகில் அனைத்து நடவடிக்கைகளும் வணிகத்துடனேயே தொடர்புபட்டுள்ளது.
- அறிவுள்ள, பலம் வாய்ந்த நுகர்வோராகவும், நற்பிரஜையாகவும் செயற்படுவதற்குரிய ஆற்றலைப் பெறலாம்
- வேலையொன்றில் ஈடுபடுவதற்கு தேவையான திறன்கள் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ளலாம்.
- தாமே வியாபாரமொன்றை ஆரம்பிக்கவும், அதனைக் கொண்டு நடத்துவற்கும் தேவையான அறிவை பெறலாம்.

பயிற்சி வினாக்கள்

01. வணிகம் பரந்துபட்ட ரீதியில் வரைவிலக்கணப்படுத்தலாம் அந்த வகையில் வணிகம் என்பது?
   1. உற்பத்தித்துறை, கைத்தொழில்துறை, சேவைத்துறை, என்பவற்றை உள்ளடக்கியதாகும்
   2. இலாப நோக்குடன் செயற்படும் பொருளாதார அமைப்பு ஆகும்.
   3. மனித தேவை விருப்பங்களை பூர்த்திசெய்யும் அமைப்பாகும்.
   4. இலாப நோக்கற்ற வகையில் செயற்ப்படும் அமைப்பு ஆகும்.
   5. மேற்கூறிய யாவும்.

02. மனித தேவை விருப்பங்கள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் தரப்படுகின்றன.

   A. தேவைகளுக்கு மாற்றுவழிகள் உண்டு, விருப்பங்களுக்கு மாற்றுவழிகள் இல்லை.

   B. தேவைகளைத் தோற்றுவிக்க முடியாது, விருப்பங்களை தோற்றுவிக்க முடியும்.

   C. மனித தேவைகள் கட்டாயமன்று, விருப்பங்கள் கட்டாயமானது.

   D. தேவைகள் அடிப்படையானது, விருப்பங்கள் அடிப்படையானதல்ல.

   E. தேவைகள் பல்வகைப்பட்டது, விருப்பங்கள் பல்வகைப்பட்டதன்று. மேலே கூறப்பட்ட கூற்றுக்களில் மிகச்சரியான கூற்று அல்லது கூற்றுக்கள்?

   1.)A யும் C யும் 2.)B யும் D யும் 3)C மட்டும் 4.)B யும் E யும் 5.)E மட்டும்

03. பின்வருவன மனிதத் தேவைகள் மற்றும் பண்புகளில் சில பின்வருமாறு விருப்பங்கள் தொடர்பிலான பண்புகளில் சில பின்வருமாறு

   A. வரையறுக்கப்படாதவை

   B. உருவாக்க கூடியவை.

   C. பல்வகைப்பட்டவை.

   D. வரையறுக்கப்பட்டவை

   E. பொதுவானவை மேலே தரப்பட்டுள்ளவற்றுள் மனித விருப்பங்களுக்குரிய பண்புகளை மட்டும் கொண்டுள்ள தொகுதிகளைத் தெரிவுசெய்க

   1.)A,B,D 2.)A,B,C 3)A,C,E 4.)B,D,E 5.)B,D,F

04. தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்காய் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்யும் போது நுகர்வோர் ஒருவர் முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள்

1. செலவினங்கள் மற்றும் பொதி.
2. பொதி மற்றும் தரம்.
3. திருப்தி மற்றும் வியாபாரப்பெயர்.
4. செலவினங்கள் மற்றும் வியாபாரப்பெயர்.
5. செலவினங்கள் திருப்தி.

05. பின்வருவனவற்றுள் விருப்பங்களின் பண்புகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ள கூற்று எது?

1. வரையறுக்கப்படாதது , பலவகைப்பட்டது , ஆளுக்காள் வேறுபடும்
2. வணிகர்களால் உருவாக்கப்படக்கூடியது , பொதுவானது , வரையறுக்கப்பட்டது
3. மனதில் தோன்றுவது , வரையறுக்கப்பட்டது , பலவகைப்பட்டது
4. வரையறுக்கப்படாதது , வரையறுக்கப்பட்டது , மனதில் தோன்றுவது
5. பொதுவானது , வணிகர்களால் உருவாக்கப்படக்கூடியது , பலவகைப்பட்டது

06. பின்வருவனற்றுள் வணிகமொன்றின் முக்கிய நோக்கமாக கருதப்பட முடியாதது எது?

1. இலாபத்தை உச்சப்படுத்தல்
2. சந்தைப்பங்கினை அதிகரித்தல்
3. வேலை வாய்ப்புக்களை உச்சப்படுத்தல்
4. சந்தையில் நிலைத்திருத்தல்
5. விற்பனையை உச்சப்படுத்தல்

07. வணிகமொன்றின் அடிப்படை?

1. பணமாகும் 2. பொருட்கள் சேவைகளாகும் 3. இலாபமாகும்
4. வாடிக்கையாளராகும் 5. உள்ளீடுகளும் வெளியீடுகளுமாகும்

08. "மனித தேவைகளையும் விருப்பங்களையும் தனித்தனியேஅடையாளப்படுத்த முடியும்". மனித தேவைகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதி எது?

1. உணவு , வாழ்விடம் , உடை , மோட்டார் வாகனம்
2. உணவு , காற்று , நீர் , பொழுதுபோக்கு
3. கல்வி , உடை , நீர் , சோறு
4. போக்குவரத்து , கல்வி , மின்சாரம் , பொழுதுபோக்கு
5. வாழ்விடம் , தொடர்பாடல் , மின்சாரம் , உடை

09. பின்வருவனவற்றுள் ஒரு மனித தேவையாக கருதப்படுவது?

1. பாண் 2. மருந்து வகைகள் 3. சப்பாத்துக்கள் 4. மோட்டார் கார்கள் 5. வீடு

10. பின்வருவனவற்றுள் எது விருப்பமாக கருதப்படுகின்றது?

1. தொடர்பாடல் 2. போக்குவரத்து 3. கல்வி 4. காப்புறுதி 5. சுகாதாரம்

பொருத்தமான சொற்களை கொண்டு இடைவெளி நிரப்புக

11. உணவு,உடை வீடு , கல்வி , சுகாதாரம் , தொடர்பாடல் பாதுகாப்பு போன்ற அனைத்தும் ______________________ என அழைக்கப்படும்

12. ஒவ்வொரு தனிநபரும் தமது தேவைகளை பல்வேறு முறைகளிலே நிறைவு செய்து கொள்ளுகின்றனர். இது ______________________ என அழைக்கப்படும்

13. மனிதனின் தேவைகள் விருப்பங்களை நிறைவு செய்வதற்காகவே —————————— உருவாக்கப்பட்டுள்ளன
14. மனிததேவைகள் விருப்பங்கள் நிறைவேற்றப்படுவது ——————— , ————————— மூலம் ஆகும்
15. மனிததேவைகள் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான பொருட்கள் , சேவைகள் ————————————————— மூலம் பெற்றுக்கொள்ளப்படும்
16. மனிதனால் கட்டாயமாக நிறைவேற்றவேண்டிய ————————— ———————— நிலைமைகளே மனித தேவைகள் என்றழைக்கப்படும்
17. உணவுத்தேவைகளை பூர்த்தி செய்யும் பல்வேறு முறைகளான சோறு பாண் இடியப்பம் தேநீர் போன்றன ——————————————— உதாரணங்களாகும்
18. வாழ்வதற்கு கட்டாயமாக நிறைவு செய்யப்பட வேண்டியது, சகலருக்கும் பொதுவானது, வரையறைக்கு உட்பட்டது என்பன ——————————————————— பண்புகள் சிலவாகும்
19. மனித ———————— ———————— பூர்த்தி செய்வதற்காக சந்தைகக்கு முன்வைக்கப்படும் எந்தவொன்றும் உற்பத்தி ஆகும்
20. உற்பத்தியினை பிரதானமாக ————————————————— ————————— என வகைப்படுத்தமுடியும்
21. சமூகத்தாக்கங்களினூடாக——————————————————————களில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது சமூகத்தாக்கங்களினால் மாற்றம் செய்ய முடியாது
22. மனித தேவைகள் விருப்பங்களை பூர்த்தி செய்வதற்காக —————————————————————————— ஊடாகப் பொருட்கள் சேவைகள் வழங்கப்படுகின்றன.
23. வணிக நடவடிக்கைகள் அனைத்தும் பொருட்கள் சேவைகளின் ———————————————— பெறுமானத்தின் அடிப்படையில் விற்பனை அல்லது பரிமாற்றம் இடம்பெறல்
24. —————————— என்பது நுகர்வுப்பொருட்களை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படும் பொருட்களாகும்
25. இறுதிப்பயன்பாட்டிற்காக நுகர்வோர் கொள்வனவு செய்யும் பாண்,ஆடை, பாதணிகள் என்பன———— ————————பொருட்கள் ஆகும்
26. தொடர்ச்சியான அடிப்படையில் பொருள்கள் சேவைகளின் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுமாயின் அதனை ————————————————— என்பர்
27. வணிகமொன்றின் விருத்திக்கும் விரிவாக்கத்திற்கும் ————————————— அவசியமானதாக இருக்கின்றது
28. வணிகமொன்றின் இரு பிரதானமான கருமங்களாவன ————————————— ————————— ——— ஆகும்

சுருக்கமான விடை தருக

01. தேவைகள் விருப்பங்கள் என்பவற்றை வரைவிலக்கணம் செய்க?
02. வணிகம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக?
03. தேவைகள் விருப்பத்திற்கு உதாரணங்கள் தருக?
04. விருப்பத்தின் சில பண்புகளை தருக?
05. தேவைகளையும் விருப்பங்களையும் அவற்றின் பண்புகளின் அடிப்படையில் வேறுபடுத்துக?
06. பொருட்கள் சேவைகளுக்கிடையிலான வேறுபாடுகளை தருக?

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

07. சந்தை என்பதனை வரைவிலக்கணம் செய்க
08. வணிகத்தின் பண்புகள் தருக?
09. நுகர்வுப்பொருள் என்பதனை விளக்குக?
10. வணிகங்கள் அடிக்கடி முகங்கொடுக்கும் இடர்கள் சில தருக?
11. வணிகங்களுக்கு காணப்படும் நோக்கங்கள் சில தருக?
12. "பொருளாதார வாழ்தன்மைக்கும் கூட வணிகங்கள் பங்களிப்பு செய்கின்றது" விளக்குக?
13. "வணிகங்களுக்கு முக்கியமானது தேவையல்ல விருப்பமாகும்" என்ற பதத்தினை தெளிவுபடுத்துக?
14. உற்பத்திப் பொருள் என்றால் என்ன? உதாரணம் தருக.
15. வணிகமொன்றின் பிரதான இரு கருமங்களையும் குறிப்பிடுக.
16. சேர்க்கப்பட்ட பெறுமதி என்பதனை விளக்குக.
17. வணிக இடர்கள் எவை?
18. வணிகப் பண்புகளில் ஒன்றாகிய "**விருப்பங்களைத் தோற்றுவித்தல்**" என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாதெனவிளக்குக.

தேர்ச்சி மட்டம் 1.2

வணிகங்களது பரம்பலையும் அதன் போக்குகளையும் அறிந்து கொள்வார்.

வணிக வளர்ச்சியின் நீண்டகால செயன்முறை

பண்டைய யுகத்தில் சுயதேவைப் பூர்த்தி முறையொன்று காணப்பட்டது.
(சுயதேவைப் பூர்த்தி முறையில் தனக்குத் தேவையானதைத் தானே உற்பத்தி செய்து கொண்டார்கள். தனக்குத் தேவையானதை தானே உற்பத்தி செய்து கொள்வது நேர் உற்பத்தி எனப்படும்.)

↓

நேர் உற்பத்தியினூடாகச் சிறப்புத் தேர்ச்சி உருவானது.

↓

தனிநபர் சிறப்புத் தேர்ச்சியின் விளைவொன்றாக மிகை உற்பத்தி ஏற்பட்டது.

↓

மிகை உற்பத்தி காரணமாக பண்டமாற்று முறை உருவானது.
வணிகப் பரம்பலில் **முதலாவது** படிமுறை பண்டமாற்று முறையாகும்.

↓

பண்டமாற்று முறையுடன் வியாபாரம் தோன்றியது.

↓

சந்தைக்காக உற்பத்தி செய்வது நேரில் உற்பத்தி எனப்படும்.

↓

பண்டமாற்று முறையில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காகப் பரிமாற்றூடகமாகப் பல்வேறு பொருள்கள் பயன்படுத்தப்பட்டன.
(வணிகப் பரம்பலின் **இரண்டாவது** படிமுறைப் பணப் பயன்பாடாகும்.)

↓

துணைச்சேவைகள் விருத்தி
(கைத்தொழில் புரட்சியுடன் வங்கி, போக்குவரத்து, காப்புறுதி, தொடர்பாடல், களஞ்சியப்படுத்தல் போன்ற துணைச் சேவைகளிலும் வளர்ச்சி ஏற்பட்டது.)

↓

கைத்தொழில் புரட்சியும் பேரளவு உற்பத்தியும்
(ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சி காரணமாக இதுவரையில் காணப்பட்ட குடிசைக் கைத்தொழில்கள் பாரியளவு கைத்தொழில்கள் எனும் நிலைக்கு மாறியமை காரணமாக வியாபாரமும் விரிவடைந்தது.)
கைத்தொழில் புரட்சியானது வணிகப் பரம்பலின் **மூன்றாவது** கட்டமாகும்.

↓

தகவல் தொழிநுட்ப வளர்ச்சியினூடாக இலத்திரனியல் வர்த்தக வளர்ச்சி
(வலையமைப்பினூடாகக் கொள்வனவு, விற்பனை நடவடிக்கைகள் இடம்பெறுவது)
(தகவல் யுகமானது வணிகப் பரம்பலின் **நான்காவது** கட்டமாகும்.)

↓

இலத்திரனியல் வணிகம்
(வணிகத்திற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் வலையமைப்பினூடாக மேற்கொள்ளப்படுவது இலத்திரனியல் வணிகம் எனப்படும்.)

பண்டமாற்று முறை தொடக்கம் இன்று வரை பணப் பயன்பாட்டில் ஏற்பட்ட பரம்பல் படிமுறை

பொருட் பயன்பாடு - புகையிலை, சிப்பி

உலோக வகைப் பயன்பாடு - தங்கம், வெள்ளி போன்ற உலோகப் பொருள்கள்

உலோக நாணயப் பணப் பயன்பாடு - பல்வேறு அளவுகளைக் கொண்ட உலோகத் துண்டுகளின் முகப்பில் குறிப்பிட்ட பெறுமானம் குறிப்பிடப்பட்டது. பிற்காலத்தில் அச்சிடப்பட்ட நாணங்களுக்கு இதுவே அடிப்படையாகும்

நாணயம், நாணயத்தாள்களின் பயன்பாடு - பெறுமதி கூடிய உலோகத்துண்டுகளைப் பணமாகப் பயன்படுத்துவதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக அகப்பெறுமதியற்ற குற்றி நாணயங்கள் பாவனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது தாள் நாணயங்களும் பயன்பாட்டிற்குட்படுத்தப்பட்டது. அரசின் அதிகாரம் பெற்ற அதிகாரியினால் வெளியிடப்படும் தாள், குற்றி நாணங்கள் இவற்றிற்குரியதாகும்.

இலங்கை	- ரூபா
ஐக்கிய இராச்சியம்	- பவுண்
ஐக்கிய அமெரிக்கக் குடியரசு	- டொலர்
ஐரோப்பிய நாடுகள்	- யூரோ

வங்கிப் பணப் பயன்பாடு - வங்கி நடைமுறைக் கணக்குடன் தொடர்புடைய காசோலைப் பயன்பாடு.

இலத்திரனியல் பணப் பயன்பாடு - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் மற்றும் எண்மானத் தொழினுட்ப விருத்தியுடன்அறிமுகப்படுத்தப்பட்ட கணினி மயப்படுத்தப்பட்ட வலையமைப்பின் மூலம் கொடுக்கல் வாங்கல் இடம்பெறும் முறையொன்றாகும்.

உதாரணம்:

வரவட்டை
கடனட்டை
முற்பணக் கொடுப்பனவு அட்டை
கடன் மாற்றுகை முறை **(Microchips / Mobile cash)**

வியாபாரம் மற்றும் துணைச் சேவைகளின் சேர்க்கை வர்த்தகம் என அழைக்கப்படும்.
(வர்த்தகம் = வியாபாரம் + துணைச்சேவைகள்)

வர்த்தகம்

- வியாபாரம்
  - உள்நாட்டு வியாபாரம்
    - சில்லறை வியாபாரம்
    - மொத்த வியாபாரம்
  - வெளிநாட்டு வியாபாரம்
    - ஏற்றுமதி வியாபாரம்
    - இறக்குமதி வியாபாரம்
- துணைச்சேவைகள்
  - வங்கி
  - போக்குவரத்து
  - தொடர்பாடல்
  - காப்புறுதி
  - களஞ்சியப்படுத்தல்

இலத்திரனியல் வர்த்தகம் நிகழ்காலத்தில் பிரபல்யமடைவதில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணிகள்

- எழுத்தாவணங்களின்றி வணிகத் தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ள முடிதல்.
- வணிக நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள முடிதல்.
- செயற்பாட்டுக் கிரயம், இருப்புக்கிரயம் என்பன குறைவடைதல்.
- பூகோளமய ரீதியான சந்தையொன்றிற்கான சந்தர்ப்பம் உருவாதல்.
- பொருட்கள், சேவைகளது தரம் உயர்வடைதல்.
- வாடிக்கையாளர்களது சிரமங்கள், நேரம் குறைவதுடன் சேமிக்கப்படல்.
- கணினி அறிவு அதிகரித்தல்.
- உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தியடைதல்

வணிகப் பரம்பலின் முக்கியமான சந்தர்ப்பங்கள் நான்காகும்.

- பண்டமாற்று
- பணப் பாவனை
- கைத்தொழில் புரட்சி
- தகவல் பொருளாதாரம்

தகவல் தொழினுட்பத்தின் வளர்ச்சி காரணமாக வணிகத்துறையில் ஏற்பட்ட நவீன போக்குகள்

- பூகோளமயமாக்கல் விரிவடைதல்
- இலத்திரனியல் வணிகம் உருவாகுதல்
- இலத்திரனியல் பணம் பாவனைக்கு வருதல்
- சூழல் தொடர்பாக அவதானம் செலுத்துதல்
- வணிகங்களின் சமூகப் பொறுப்புத் தொடர்பில் கவனஞ் செலுத்துதல்
- வணிக வெளிமூலங்கள் (Business Outsourcing)

வினா - விடை

01. கைத்தொழில் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட பிரதான மாற்றங்கள் எவை?

- பேரளவு உற்பத்தி
- இயந்திர மயமாக்கல் / புதிய தொழிநுட்ப முறை அறிமுகம்
- பல்வேறு துறைகளின் அபிவிருத்தி / துணைச் சேவைகளின் விருத்தி
- அதிகமான வேலைவாய்ப்பு
- தொழிற்பிரிப்பு , சிறப்புத் தேர்ச்சி
- விவசாயத்திலிருந்து கைத்தொழில் துறைக்கு மாற்றம்
- தொழிற்சாலை முறையின் தோற்றம்
- சந்தை விரிவாக்கம் (தேசிய , சர்வதேச)
- முகாமைத்துவ அபிவிருத்தி

02. துணைநிலைச் சேவைகளைக் குறிப்பிடுக

- பணமும் வங்கியும்
- தொடர்பாடல்
- களஞ்சியப்படுத்தல்
- காப்புறுதி
- போக்குவரத்து

03. வர்த்தகம் மற்றும் வணிகம் என்பனவற்றிற்கிடையே காணப்படும் தொடர்பினைச் சுருக்கமாக விளக்குக.

வியாபாரமும் துணைச் சேவைகளும் இணைந்த செயற்பாடு வர்த்தகமாகும்.
வர்த்தகம் மற்றும் கைத்தொழில் இணைந்த செயற்பாடு வணிகமாகும்.
எனவே வணிகத்தின் ஒரு பகுதியாக வர்த்தகம் காணப்படும் என்ற அடிப்படையில் இவை இரண்டும் தொடர்புபடுகின்றது.

04. வேலையில் சிறப்புத் தேர்ச்சி மூலம் ஊழியர் ஒருவருக்கு ஏற்படும் அனுகூலங்கள் , பிரதிகூலங்கள் யாவை?

அனுகூலங்கள்	**பிரதிகூலங்கள்**
தொழில் தொடர்பான சிறப்புத் தேர்ச்சி ஏற்படும்	மனச்சோர்வு, சலிப்புத் தன்மை ஏற்படும்
நேரம் மீதப்படுத்தப்படும்	தொழில் சார் நோய் ஏற்படும்
உற்பத்தித் திறன் அதிகரிக்கும்	ஊழியர் நகர்வு கடினம்
வினைத்திறன் அதிகரிக்கும்	ஊழியர் வரவின்மை, தாமதம் ஏனைய தொழில் நடவடிக்கையில் தாக்கம் ஏற்படுத்தும்
விரயம் குறைவடையும்	
புதிய கண்டுபிடித்தல் திறன் ஏற்படும்	

தேர்ச்சி மட்டம் 1.3

பல்வேறு நியதிகளினடிப்படையில் வணிகங்களை வகைப்படுத்துவார்.



வினா –

முதல்நிலை, இரண்டாம்நிலை, மூன்றாம் நிலை ஆகிய உற்பத்திகளை தனித்தனியாக விளக்குக.

விடை

- **முதல்நிலை உற்பத்தி** - இயற்கையிலிருந்து மனித தேவைகளுக்காக நேரடியாகப் பெற்றுக் கொள்ளும் வளங்கள் ஆகும். இவை எவ்வித மாற்றமும் ஏற்படுத்தாமல் பயன்படுத்தப்படும்.
- **இரண்டாம்நிலை உற்பத்தி** – முதல்நிலை உற்பத்தி மூலம் கிடைக்கப் பெற்றவற்றை உருமாற்றம் செய்து முடிவுப்பொருட்களை தயாரித்தல இரண்டாம்நிலை உற்பத்தி ஆகும்.
- **மூன்றாம் நிலை உற்பத்தி** – வியாபாரம் மற்றும் துணைச்சேவைகளை உள்ளடக்கியவை மூன்றாம் நிலை உற்பத்திகளாகும்.

உற்பத்தித் துறை		
விவசாயம்		
விவசாயம், கால்நடை	150	400
காட்டுவளம்	50	
மீன்பிடி	200	
கைத்தொழில்		
உற்பத்தி கைத்தொழில்	500	1950
நிர்மாணக் கைத்தொழில்	600	
சுரங்கம்,கனிய அகழ்வு	500	
மின்,வாயு,வெப்பம், குளிரூட்டல்	200	
நீர் சுத்திகரிப்பும் விநியோகமும்	100	
மலமகற்றல்,கழிவகற்றல் முகாமை, மீள்சுழற்சி	50	
சேவை		
வியாபாரம், களஞ்சியம் போக்குவரத்துச் சேவை, விடுதி வசதி வழங்கல், உணவு, குடிபானம் வழங்கல்	1000	2400
தகவல் தொடர்பாடல்	600	
நிதி, காப்புறுதி மற்றும் வீட்டுரிமையும் ஆதன வியாபாரமும்	200	
தொழில்சார் சேவைகள் மற்றும் ஏனைய தனியார் சேவைகள	400	
அரச நிர்வாகம், தேசிய பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சேவை	200	
அடிப்படைவிலையில் கூட்டிய பெறுமதி		**4750**

உற்பத்தித் தன்மை		
முதலாம் நிலை		
விவசாயம், கால்நடை	150	900
காட்டுவளம்	50	
மீன்பிடி	200	
சுரங்கம்,கனிய அகழ்வு	500	
இரண்டாம் நிலை		
உற்பத்தி கைத்தொழில்	500	1100
நிர்மாணக் கைத்தொழில்	600	
மூன்றாம் நிலை		
மின்,வாயு,வெப்பம், குளிரூட்டல்	200	2750
நீர் சுத்திகரிப்பும் விநியோகமும்	100	
மலமகற்றல்,கழிவகற்றல் முகாமை, மீள்சுழற்சி	50	
வியாபாரம், களஞ்சியம் போக்குவரத்துச் சேவை, விடுதி வசதி வழங்கல், உணவு,குடிபானம் வழங்கல்	1000	
தகவல் தொடர்பாடல்	600	
நிதி, காப்புறுதி மற்றும் வீட்டுரிமையும் ஆதன வியாபாரமும்	200	
தொழில்சார் சேவைகள் மற்றும் ஏனைய தனியார் சேவைகள	400	
அரச நிர்வாகம், தேசிய பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சேவை	200	
அடிப்படைவிலையில் கூட்டிய பெறுமதி		**4750**

வினாக்கள்

01.“உற்பத்தியின் தன்மைக்கேற்ப வணிகங்களை முதலாம் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை என வகைப்படுத்திக் காட்ட முடியும்” பின்வருவனவற்றுள் முதலாம் நிலை வணிகத்தை மட்டும்கொண்ட தொகுதி

1. வியாபாரம், போக்குவரத்துச் சேவை, விடுதி வசதி வழங்கல்,உணவு, குடிபானம் வழங்கல்
2. விவசாயம், கால்நடை, காட்டுவளம், மீன்பிடிக் கைத்தொழில், சுரங்கமறுத்தலும் கனிய அகழ்வும்
3. உற்பத்திக் கைத்தொழில், நிர்மாணக் கைத்தொழில்
4. அரச நிர்வாகம், தேசிய பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சேவை, தொழில்சார் சேவைகள் மற்றும் ஏனைய தனியார் சேவைகள், மலமகற்றல் நடவடிக்கைகள், கழிவகற்றல் முகாமைத்துவமும் அப்பொருள்களை மீள் சுழற்சிப் பயன்பாட்டிற்குட்படுத்தலும்.
5. தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகள், மின்சாரம், வாயு, வெப்பம் மற்றும் குளிரூட்டல் வழங்கல், நீர் சுத்திகரிப்பும் விநியோகமும், நிதி, காப்புறுதி மற்றும் வீட்டுரிமையும் ஆதன வியாபாரமும்.

02.சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், தயாரிப்பு(உற்பத்தி), மின்சாரம், எரி வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல், நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல், சாக்கடை, கழிவுப்பொருள் சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் நடவடிக்கைகள், கட்டடவாக்கம்(நிர்மாணம்) என்பன உள்ளடங்கும் உற்பத்திக்கு வழங்கும் பெயர்

1. முதலாம் நிலை உற்பத்தி
2. கைத்தொழில் உற்பத்தி
3. சேவை உற்பத்தி
4. விவசாய உற்பத்தி
5. இரண்டாம் நிலை உற்பத்தி

03.பின்வரும் அட்டவணை வணிக வகைகளையும் அதற்கான நியதிகளின் அடிப்படைகளையும் காட்டுகின்றது.

	X	Y
A	முதலாம் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம்நிலை	1. உற்பத்தித் துறையின் அடிப்படையில்
B.	இலாபத்தை நோக்காகக் கொண்ட வணிகம், இலாப நோக்கற்ற வணிகம்	2. பருமனின் அடிப்படையில்
C.	தனியார் துறை, பொதுத்துறை வணிகம்	3. உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில்
D.	சிறிய, நடுத்தரளவு, பாரியளவு வணிகம்	4. உரிமையின் அடிப்படையில்
E.	விவசாயம், கைத்தொழில், சேவை	5. நோக்கத்தின் அடிப்படையில்

இதற்கமைய சரியான வகைப்படுத்தலும் அதற்கான சரியான நியதி அடிப்படைகளும் எவை?

1. A-3 B-5 C-4 D-2 E-1
2. A-3 B-1 C-4 D-2 E-5
3. A-1 B-5 C-4 D-2 E-3
4. A-3 B-4 C-5 D-2 E-1
5. A-1 B-3 C-2 D-4 E-1

04. பின்வரும் அட்டவணையில் முறையே X நிரலானது வணிக வகைப்படுத்தலுக்கான சில அடிப்படைகளையும் Y நிரலானது அவ்வடிப்படைகளுடன் தொடர்புடையதான சில உதாரணங்க ளையும் எடுத்துக்காட்டுகின்றது.

X	Y
A - உடமை	1. இரத்தினக்கல் அகழ்வு
B - குறிக்கோள்	2. அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம்
C – அளவுத்திட்டம்	3. இரத்தினக்கல் பட்டை தீட்டுதல் (மினுக்குதல்)
D - கைத்தொழில் மூலம்	4. இரத்தினக்கல் கைத்தொழிலுக்கான இலவச அறிவுரை
E - உற்பத்தியின் தன்மை	5. இரண்டு ஊழியர்களுடனான இரத்தினக்கல் வணிகம்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

ஒவ்வொரு வணிக வகைப்படுத்தலுக்கான அடிப்படைகளும் உதாரணங்களுடன் சரியாகப் பொருந்தும் தொகுதியை தெரிவு செய்க.

1. A - 2, B - 5, C - 3, D - 4, E - 1
2. A - 2, B - 4, C - 5, D - 1, E - 3
3. A - 2, B - 3, C - 4, D - 1, E - 5
4. A - 1, B - 3, C - 2, D - 5, E - 4
5. A - 4, B - 2, C - 5, D - 1, E - 3

05.இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் உயர்ந்த பங்களிப்பினை வழங்கும் துறை

_ _.துறை ஆகும்.

06.வலையமைப்பின் ஊடாக கொள்வனவு, விற்பனை நடவடிக்கைகள் இடம்பெறுவது

_ எனப்படும்.

07.வணிகத்திற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் வலையமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்படுவது _

_ என அழைக்கப்படும்.

08.இலங்கை மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்படும் அறிக்கைப்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அடங்கும் கூறுகள் எவை?

1. _
2. _
3. _

09.ராஜா என்பவர் கண்டியில் அமைந்துள்ள தனது கட்டடத்தில் 'ராஜா புறுட்ஸ்' எனும் பெயரில் நிறுவனமொன்றை நடாத்தி வருகின்றார். இந்நிறுவனம் பிரதேசத்திலுள்ள பழங்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து, அவற்றை வாகனங்களின் மூலம் வியாபார நிலையங்களுக்கு விநியோகித்து வருவதுடன், 'ராஜாமிக்ஸ்' எனும் பெயரில் பப்பாசி பழத்திலிருந்து தயாரிக்கும் சுவையான குடிபான வகையொன்றையும் சந்தைக்கு வழங்குகிறது. இவ்வணிகத்தில் விசேட ஆற்றலுடன் கூடிய பத்து ஊழியர்கள் பணியாற்றுவதுடன் இணையத்தைப் பயன்படுத்தி சந்தை தொடர்பில் மாத்திரமன்றி நவீன உற்பத்தி முறைகள் தொடர்பிலும் அடிக்கடி தகவல்கள் பெறப்படுகின்றன.

1. இச்சம்பவத்தில் குறிப்பிடப்படுகின்ற தயாரிப்புக்களை பொருட்கள், சேவைகள் என வேறுபடுத்திக் காட்டுக.
2. மேலே சம்பவத்தில் குறிப்பிடப்படுகின்ற வணிகத்தை வித்தியாசமான நான்கு வணிக வகைப்படுத்தல் அடிப்படைகளின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.

10.1ம் நிலை, 2ம் நிலை, 3ம் நிலை உற்பத்திக்கும், வணிகம், வர்த்தகம் என்பவற்றுக்கும் இடையிலான தொடர்பினை பாய்ச்சல் கோட்டு அடிப்படையில் விளக்குக.

11. சேவைத்துறையின் பங்கு தொடர்ந்து அதிகளவில் காணப்படுவதற்கு செல்வாக்கு செலுத்தியுள்ள காரணங்கள் 2 தருக.

12.அண்மையில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் (COVID - 19) உலக நாடுகளில் மனித பேரவலத்தை ஏற்படுத்தியுள்ள, மறைமுக மூன்றாம் உலகமகா யுத்தமாக வரலாற்றாளர்களால் நோக்கப்படுகின்றது. இதன் காரணமாக உலக நாடுகளினுடைய பொருளாதாரம் மாத்திரமின்றி, இலங்கைப் பொருளாதாரமும் பாரியளவில் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

1 இலங்கைப் பொருளாதாரம் ஸ்தம்பிதம் அடைந்துள்ளமையில் கொரோனா வைரஸ் எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது என எடுத்துக்காட்டுக?

2 இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஒவ்வொரு துறைவாரியான பங்களிப்பு விகிதாசாரங்களைக் குறிப்பிடுக?

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தேர்ச்சி மட்டம் 1.4

வணிகம் உள்ளீட்டு, வெளியீட்டுச் செயன்முறையொன்றாகுமென பகுப்பாய்வு செய்வார்.

வணிகச் செயற்பாடுகளை உள்ளீட்டு - வெளியீட்டுச் செயன்முறையொன்றாகப் பின்வருமாறு வரைபடம் மூலம் முன்வைக்கலாம்

வணிக உள்ளீடுகள்	→	வணிக தொழிற்பாடுகள்	→	வணிக வெளியீடுகள்
நிலம் உழைப்பு மூலதனம் முயற்சி அறிவு தகவல் காலம்		செயன்முறைகள்(உற்பத்தி) சந்தைப்படுத்தல் நிர்வாகம் நிதி நடவடிக்கைகள் மனிதவளநடவடிக்கை ஆய்வு, அபிவிருத்தி		பொருட்கள் சேவைகள்

வணிகக் கருமங்கள்

இல	வணிகக் கருமங்கள்	விளக்கம்
01	செயன்முறைகள்(உற்பத்தி)	வளங்களைப் பொருள் அல்லது சேவையாக மாற்றும் செயற்பாடே உற்பத்தி எனப்படும்.
02	சந்தைப்படுத்தல்	வாடிக்கையாளரின் தேவைகள், விருப்பங்களை இனங்கண்டு அவற்றை நிறைவு செய்வதற்காகக் கருமமாற்றுதல் சந்தைப்படுத்தல் எனப்படும்.
03	நிர்வாகம்	வணிகக் கருமங்களுடன் தொடர்புடைய எழுத்தாவணங்களைப் பேணுதல், தொடர்பாடல் கருமங்களைப் பேணுதல் என்பன வணிகமொன்றின் நிர்வாகக் கருமத்தில் உள்ளடக்கப்படும்.
04	நிதி நடவடிக்கைகள்	நிதியீட்டல், அவற்றை ஈடுபடுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய கருமங்கள் நிதி எனப்படும்.
05	மனிதவளநடவடிக்கை	ஈர்ப்பு, தெரிவு செய்தல், இணைத்தல், பயிற்சியளித்தல், நலன்புரிகள் என்பவற்றுடன் தொடர்புடைய கருமங்கள் மனித வளக்கருமங்களாகும்.
06	ஆய்வு, அபிவிருத்தி	ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் என்பதில் வெளியீட்டின் தரத்தினை மேம்படுத்துதலும் புதிய வெளியீடுகளைக் கண்டுபிடித்தலும் உள்ளடங்கும்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

உதாரணம் : வெதுப்பகமொன்றின் வணிகச்செயற்பாடுகளை உள்ளீட்டு வெளியீட்டுச் செயன்முறை யொன்றாகப் பின்வருமாறு வரைபடம் மூலம் காட்டலாம்.

உள்ளீடுகள்(வளங்கள்)		செயல்முறை		வெளியீடுகள்
நிலம்: வெதுப்பகம் அமைந்துள்ள இடம் **உழைப்பு:** பாண் உற்பத்தி செய்பவரின் உழைப்பு **மூலதனம்:** கட்டடம், வெதுப்பகம், தட்டுக்கள் **முயற்சியாண்மை:** வெதுப்பக உரிமையாளர்.˙. காரணிகளை ஒன்று சேர்ப்பவரின் திறன் **தகவல்:** புதிய நுட்ப முறை, சந்தைத் தகவல்கள் **காலம் / நேரம்:** ஊழியர்கள் வேலை செய்யும் நேரம் மேலதிக வேலை நேரம் **அறிவு:** ஊழியர் திறன், புதிய உற்பத்தி தொடர்பான அறிவு	⇨	**உற்பத்தி:** பொருள்களைப் பெறல் பொருள்களைக் கலத்தல் பாண் தயாரித்தல் **சந்தைப்படுத்தல்:** விளம்பரம் செய்தல் விநியோகித்தல் விலையினை நிர்ணயித்தல். **நிர்வாகம்:** ஊழியர் கோவைகளைத் தயாரித்தல் ஊழியர் வரவு அட்டவணையைப் பேணல். **நிதிக் கருமங்கள்:** தேவையான நிதியினைப் பெற்றுக் கொள்ளல். சொத்துக்களைக் கொள்வனவு செய்தல். செலவுகளை மேற்கொள்ளல். **மனிதவளக் கருமங்கள்:** ஊழியர்களை இணைத்தல் பயிற்சியளித்தல் பதவியுயர்வு வழங்கல் **ஆய்வும் அபிவிருத்தியும்:** ஆய்வுகளை மேற் கொள்ளல். உற்பத்தியின் தரத்தினை மேம்படுத்துவதற்கு ஆய்வு களை மேற்கொள்ளல	⇨	பாண் பணிஸ் கேக் (வெதுப்பக உற்பத்திகள்)

வினாக்கள்

01. *பாதணி உற்பத்தி நிறுவனம் ஒன்றில் இடம்பெறும் வணிகக் கருமங்கள் சில கீழே தரப்படுகின்றன.*

A. *ஊழியர் வருகை அட்டவணை பேணல்.*

B. *பாதணி உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை பெறல்.*

C. *உற்பத்தி செய்யப்பட்ட பாதணிகளை விநியோகித்தல்.*

D. *ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு.*

E. *பாதணிகளுக்கு பத்திரிகையில் விளம்பரம் செய்தல்.*

F. *ஊழியர்களுக்கு பதவியுயர்வு வழங்கல்*

G. *பாதணிகளுக்கு அதன் உற்பத்திக் கிரயத்தில் 10% இலாபம் வைத்து விலையிடலை மேற்கொள்ளல்.*

மேற்குறித்த விடயங்களில் சந்தைப்படுத்தல் கருமங்களை மட்டும் உள்ளடக்கிய

விடைத்தொகுதியாக அமைவது.

1) A, C, F 2) A, B, D 3) D, E, G 4) C, E, G 5) C, E, F

02. வணிகம் உள்ளீட்டு, வெளியீட்டுச் செயன்முறையொன்றாகும்" அதற்கமைய
   1. வணிகங்களின் உள்ளீடுகள்
   2. வணிகக் கருமங்கள் அல்லது செயற்பாடுகள்
   3. வணிகங்களின் வெளியீடுகள் என்பவற்றைக் குறிப்பிடுக?

தேர்ச்சி மட்டம் 1.5: வணிகம் தொடர்பில் அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் வணிகம் தொடர்பில் அக்கறை செலுத்துவதற்கான காரணங்களைக் கேட்டறிவார்.

வணிகம் தொடர்பில் அக்கறை காட்டும் பிரிவினர்கள்

1. உரிமையாளர் / பங்காளர்கள்
2. முகாமையாளர்
3. ஊழியர்கள்
4. கடன்கொடுத்தோர்கள்
5. வாடிக்கையாளர்கள்
6. வழங்குநர்கள்
7. பல்வேறு முதலீட்டாளர்கள்
8. அரசு
9. பொதுமக்கள்
10. ஏனைய பிரிவினர்கள்

ஒவ்வொரு பிரிவினரும் வணிகம் தொடர்பில் அக்கறை காட்டுவதற்கான காரணங்கள்

உரிமையாளர்	➢ தான் முதலீடு செய்த தொகைக்கு ஏற்ப போதுமானளவு இலாபம் கிடைக்கின்றதா என்பதை அறிந்து கொள்ளல். ➢ வணிகத்தின் விருத்தி தொடர்பில் அறிந்து கொள்வதற்கு ➢ சந்தைப் பங்கினை அறிந்து கொள்வதற்கு
முகாமையாளர்	➢ வணிகத்தின் இலாபத்தை உச்சப்படுத்துவதற்கு ➢ வணிகத்தின் விருத்தி தொடர்பில் அறிந்து கொள்வதற்கு ➢ முகாமைத்துவத் தீர்மானங்களின் வெற்றி தோல்வியினை அறிந்து கொள்வதற்கு
ஊழியர்கள்	➢ உயர்ந்த சம்பளத்தை பெற்றுக் கொள்வதற்கு ➢ ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் கிடைக்குமா என்பதை அறிந்து கொள்வதற்கு ➢ தொழிலில் பதவியுயர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு
கடன்கொடுத்தோர்கள்	➢ வழங்கப்பட்ட கடனை மீளப் பெற்றுக் கொள்ளும் ஆற்றலை அறிந்து கொள்வதற்கு ➢ கடன் பணத்தின் பாதுகாப்பினை அறிந்து கொள்வதற்கு ➢ பிணைப் பத்திரங்களின் பாதுகாப்புத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு
வாடிக்கையாளர்கள்	➢ தரமான பொருள்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ➢ பொறுப்புக்கள் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்கு ➢ வணிகத்தின் நீண்டகால வாழ்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு
வழங்குநர்கள்	➢ தொடர்ச்சியாகக் கட்டளைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ➢ வழங்கப்பட்ட பொருட்களுக்கான பணத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு
பல்வேறு முதலீட்டாளர்கள்	➢ தன்னிடமுள்ள வளங்களை எதிர்காலத்தில் அவ்வணிகத்தில் முதலீடு செய்வதற்கு

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

அரசு	➢ வரிகளை அறவிட்டுக் கொள்வதற்கு / வரிச் சலுகையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு ➢ வேலை வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு ➢ பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் அளவிடுவதற்கு
பொதுமக்கள்	➢ சூழல் பாதுகாப்புத் தொடர்பில் தேடிப் பார்ப்பதற்கு ➢ வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு

வணிகத்தில் அக்கறை காட்டும் பிரிவினர்கள் வணிகத்திற்கு முக்கியம் பெறுவதற்கான காரணங்களில் சில பின்வருமாறு:

பிரிவினர்கள	வணிகத்திற்கு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள
உரிமையாளர்	➢ முதலீட்டினை அதிகரித்துக் கொள்வதற்கு ➢ வணிகத்தின் வாழ்தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு
ஊழியர்கள்	➢ ஊழியர்களின் வினைத்திறனை அதிகரித்துக் கொள்வதற்கு ➢ ஊழியர்களைத் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு ➢ ஊழியர் ஈர்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு
கடன்கொடுநர்கள்	➢ தொடர்ச்சியாகத் தேவையான நிதியினை ஈட்டிக் கொள்வதற்கு ➢ குறைந்த கிரயத்தில் நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு
அரசு	➢ வரிச் சலுகையினைப் பெற்றுக் கொள்வதற்கு ➢ உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ➢ தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு
வாடிக்கையாளர்கள்	➢ உரிய பொருள் அல்லது சேவை தொடர்பில் சந்தைப் பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு ➢ நுகர்வோரின் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்கு ➢ வாடிக்கையாளர்களில் பக்கச்சார்பினை உருவாக்குவதற்கு

வினாக்கள்

01. வணிகமொன்றில் அக்கறை கொண்டுள்ள தரப்பினரும் அவர்கள் அவ்வாறு அக்கறை கொண்டுள்ளமைக்கான காரணங்களும் கீழே தரப்பட்டுள்ளது.

அக்கறை செலுத்தும் தரப்பினர்	அக்கறை கொண்டுள்ளமைக்கான காரணங்கள்
A. அரசு	1. விலை, தரமான பொருட்கள் சேவைகள்
B. கடன் கொடுத்தோர்	2. சம்பளம், பதவியுயர்வு
C. ஊழியர்	3. வணிக இலாபம்,விருத்தி,சந்தைப் பங்கு
D. உரிமையாளர்	4. வரி, வேலைவாய்ப்பு,பொருளாதார அபிவிருத்தி
E. வாடிக்கையாளர்கள்	5. மீளசெலுத்தும் ஆற்றல், வட்டி

சரியான ஒழுங்குமுறையை எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவுசெய்க.

1. A-3 B-5 C-4 D-2 E-1
2. A-3 B-1 C-4 D-2 E-5
3. A-1 B-5 C-4 D-2 E-3
4. A-4 B-5 C-2 D-3 E-1
5. A-4 B-5 C-1 D-2 E-3

02. சாமந்தி என்பவர் வெதுப்பக உற்பத்தி பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செயடவதற்காக "சாமந்தி ஹோட்டல்" என்னும் வணிகத்தை மாகாண சபையின் அனுமதியுடன் ஆடைத்தொழிற்சாலை ஒன்றுக்கு அண்மையுள்ள தனது வீட்டில் தாபித்தார். இவர் இரு வேலையாட்களை வேலைக்கு அமர்த்தியிருந்தவுடன் ஹோட்டலின் முகாமையைத் தனது மகனிடத்தில் ஒப்படைத்திருந்தார்.
இதன்படி சாமந்தியின் வணிகத்தில் அக்கறையுடைய தரப்பினரின் எண்ணிக்கை.
1. 3 2. 4 3. 5 4. 6 5. 7

03. பின்வரும் அட்டவணையில் X நிரலானது ஊடகத் துறை தொடர்பிலான அக்கறையுடைய சில தரப்பினரையும் Y நிரலானது அவர்களது அக்கறைக்கான சில காரணங்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

	X	Y
A.	நிருபர்கள்	1. ஊடகத் தொழில்வாண்மையாளர்களுக்கான உரிமைகளை உறுதி செய்வதற்கு
B.	பொது மக்கள்	2. தகவல்களைச் சேகரிப்பதற்கு
C.	அரசாங்கம்	3. தகவல்களை முகாமை செய்வதற்கு
D.	ஊடகத் தொழில்வாண்மையாளர்களின் தொழிற் சங்கங்கள்	4. தகவல்கள் ஊடாக விழிப்படையச் செய்வதற்கு
E.	ஊடக நிறுவனங்களின் நிர்வாகிகள்	5. தகவல்கள் தொடர்பான கொள்கைகளை உருவாக்குவதற்கு

அக்கறையுடைய தரப்பினரையும் அவர்களது அக்கறைக்கான காரணங்களையும் சரியாக இணைததுக் காட்டும் தொகுதியைத் தெரிவு செய்க.

1. A - 1, B - 2, C - 5, D - 3, E - 4
2. A - 1, B - 3, C - 4, D - 5, E - 2
3. A - 2, B - 4, C - 5, D - 1, E - 3
3. A - 3, B - 1, C - 2, D - 4, E - 5
5. A - 5, B - 2, C - 3, D - 4, E - 1

04. அக்கறையுடைய தரப்பினராக அரசாங்கமானது பாடசாலைகளின் மீது அக்கறை செலுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் நான்கை எழுதுக.
    1. ....
    2. ....
    3. ....
    4. ....

வினாக்கள்

01. வணிகச்சூழலின் வகையினை பாய்ச்சற்கோட்டுப்படம் மூலம் தருக?
02. வணிகச்சூழலினை ஆய்வு செய்வதன் முக்கியத்துவத்தினைக் குறிப்பிடுக?
03. அகச்சூழல் காரணிகள் எவை?
04. குகன் பாடசாலைக்கு அண்மையில் புத்தகசாலை (Stationary) வணிகமொன்றை நடாத்தி வருகின்றார். இவரின் வணிகத்தில் வெளியக ரீதியாக அக்கறை செலுத்தும் நால்வரைக் குறிப்பிட்டு அவர்கள் அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள் இரண்டு வீதம் தருக.
05. தனியார் வைத்தியசாலையொன்றின் மீது அக்கறை காட்டும் நான்கு தரப்பினரைக் குறிப்பிடுவதுடன், அந்த ஒவ்வொரு தரப்பினரும் அவ்வாறு அக்கறை காட்டுவதற்கான காரணங்கள் இரண்டு வீதம் குறிப்பிடுக.

தேர்ச்சி மட்டம் 1.6 **வணிகத்தின் மீது அழுத்தத்தையேற்படுத்தும் வணிகச் சூழலை வகைப்படுத்திக் காட்டுவார்**

வணிகச் சூழல்

வணிகக் கருமங்களில் தாக்கத்தையேற்படுத்தும் காரணிகள் செயற்படுகின்ற சூழலை வணிகச் சூழல் என அழைக்கப்படும்.

வணிகச் சூழற்காரணிகளைப் பிரதானமாக இரு வகைகளாக வகைப்படுத்த முடியும்

1. அகச்சூழல்
2. புறச்சூழல்

அகச்சூழல்

அமைப்பொன்றில் காணப்படுகின்றதும் தாக்கத்தையேற்படுத்துவதுமான குழுக்கள்(Forces) நிலைமைகள் (Condition) என்பன வணிகமொன்றின் அகச்சூழல் என அழைக்கப்படும்.

- உரிமையாளர்
- முகாமையாளர்
- ஊழியர்
- நிறுவனக் கட்டமைப்பு
- நிறுவனக் கலாசாரம்
- வளங்கள்

புறச்சூழல்

வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதும் அவ்வணிகத்திற்கு வெளியில் காணப்படும் சகலதும் புறச்சூழல் எனப்படும்.

1. அண்மிய சூழல்
2. பேரினச் சூழல்

அண்மிய சூழல்

வணிகப் புறச் சூழலுக்குரியவைகளினால் வணிகத்தில் தாக்கத்தை யேற்படுத்துகின்ற விசேட அமைப்பு அல்லது குழு வேலைச் சூழல் அண்மிய சூழல் என அழைக்கப்படும்.

- நுகர்வோர்
- வழங்குநர்
- போட்டியாளர்
- பிரதியீட்டுப் பொருள் உற்பத்தியாளர்
- சந்தையில் பிரவேசிப்பதற்கு எதிர்பார்த்திருக்கும் புதிய வணிகர்கள்

பேரினச் சூழல்

வணிகத்தின் விரிவான சுற்றுச் சூழலும் அதனுடன் இணைந்து தாக்கத்தையேற்படுத்தும் குழுவும் பேரினச்சூழல் அல்லது பொதுச் சூழல் எனப்படும்.

- அரசியல் சூழல் (P)
- சட்டச் சூழல்
- பொருளாதாரச் சூழல் (E)
- சமூக மற்றும் கலாசாரச் சூழல் (S)
- தொழினுட்பச் சூழல் (T)
- இயற்கைச் சூழல் (N)
- மக்கள் சூழல் (D)
- பூகோளச் சூழல (G)

வணிகச் சூழலைக் கற்பதினூடாக வணிகரொருவர் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

- பலங்களை அறிந்து கொள்ளல்
- பலவீனங்களை அறிந்து கொள்ளல்
- வணிக வாய்ப்புக்களை அறிந்து கொள்ளல்
- அச்சுறுத்தல்களை அறிந்து கொள்ளல்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

கீழுள்ள வரைபடத்தில் வரவேண்டிய சூழல் காரணிகளுக்கான உள்ளடக்கங்களை இனங்கண்டு எழுதுக.



மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

தேர்ச்சி மட்டம் 1.7: வணிகத்தின் அகச்சூழல் காரணிகள் வணிகங்களில் ஏற்படுத்தும் தாக்கத்தைப் பகுப்பாய்வு செய்வார்

இல	அகச்சூழல் காரணிகள்	விளக்கம்
01	**உரிமையாளர்**	வணிகத்திற்கு வளங்களை வழங்கியுள்ள அல்லது நிதியினை முதலீடு செய்திருக்கும் இலாபம் அல்லது நட்டத்தை ஏற்கும் பிரிவினர் உரிமையாளராவார்.
02	**முகாமையாளர்**	வணிகத் திட்டங்களைத் தயாரித்தல் தீர்மானமெடுத்தல் என்பவற்றை மேற்கொள்ளும் பிரிவினர் முகாமையாளராவர்.
03	**ஊழியர்கள்**	உயர் முகாமையாளரால் தயாரிக்கப்படும் திட்டங்கள் மற்றும் தீர்மானங்களுக்கமைய கீழ் மட்டத்தில் குறிப்பிட்ட கருமங்களில் ஈடுபடும் பிரிவினர்கள் ஊழியர்களாவர்
04	**நிறுவன கலாசாரம்**	வணிகத்தில் காணப்படும் அனைவரிடமும் பகிர்ந்தளிக்கப்படுவதும் அடுத்து வரும் சந்ததியினருக்கு ஒப்படைக்கப்படும் நம்பிக்கைகள், பெறுமதிகள், மனப்பாங்குகள், பழக்கவழக்கங்கள், நடத்தை முறைகள், முன்மாதிரிகள் என்பன நிறுவனக் கலாசாரங்களாகும்.
05	**நிறுவனக் கட்டமைப்பு**	நிறுவனத்தின் நோக்கத்தினை இலகுவாக அடைந்து கொள்ளக்கூடியவாறு அமைப்பின் கருமங்கள், வளங்கள், அதிகாரம் என்பன பிரிந்து செல்லும் முறை நிறுவனக் கட்டமைப்பு எனப்படும்.
06	**நிறுவன வளங்கள்**	பொருள்கள், சேவைகளை உற்பத்தி செய்வதற்காக உள்ளீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்ற நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சியாண்மை, காலம், தகவல்கள், அறிவு போன்ற அனைத்தும் வளங்களாகும்.

பலம் - நிறுவனத்தின் நோக்கம், குறிக்கோளினை அடைவதற்கு சாதகமாக அமையும் உள்ளக சூழல் காரணிகள்

பலவீனம் - நிறுவனத்தின் நோக்கம், குறிக்கோளினை அடைவதற்கு பாதகமாக அமையும் உள்ளக சூழல் காரணிகள்

சூழல் காரணிகள்	பலங்கள்	பலவீனங்கள்
உரிமையாளர்	○ கூடுதலானோர் காணப்படல். ○ அவர்களிடம் நிதிப்பலம் அதிகரித்தல். ○ அவர்களின் அறிவும் அனுபவமும் அதிகரித்தல்.	○ குறைவான தொகையினர் ○ நிதிப்பலம் குறைவாக இருத்தல் ○ அறிவும் திறனும் குறைவாக இருத்தல்.
முகாமையாளர்	○ பயிற்சியும் அனுபவமும் அதிகரித்தல். ○ சரியான தீர்மானமெடுக்கும் ஆற்றல	○ பயிற்சியும் அனுபவமும் குறை வடைதல். ○ தீர்மானமெடுப்பதில் பின்னடைவு ○ பிழையான தீர்மானமெடுத்தல்.
ஊழியர்கள்	○ திறமையான, அனுபவமுள்ள ஊழியர்கள் காணப்படல். ○ பல்வேறு திறன்களைக் கொண்டிருத்தல். ○ சிறந்த மனப்பாங்கு காணப்படல். ○ ஊக்கமுள்ள ஊழியர்கள் காணப்படல்.	○ பயிற்சியற்ற ஊழியர்கள் காணப்படல். ○ பொறுப்பு, வகைகூறல் அற்ற ஊழியர்கள் காணப்படல். ○ பாதகமான வேலைப்பழக்கம் காணப்படல். ○ எதிரான மனப்பாங்கினைக் கொண்டிருத்தல். ○ வினைதிறனற்ற ஊழியர்கள்
நிறுவன கலாசாரம்	○ நேரான மதிப்பீடு மற்றும் நேரான முறைமையும் காணப்படல். ○ அதற்கேயுரிய விருத்தியடைந்த நடத்தை, ஒழுக்கம் மற்றும் பழக்க வழக்கங்கள் காணப்படல்.	○ நேர்மதிப்பீடும் நேரான முறைமை, நடத்தை, ஒழுக்கம் என்பன காணப் படாமை. ○ உயர் மேற்பார்வை காணப்படாமை
நிறுவனக் கட்டமைப்பு	○ பொருத்தமானவாறு வேலைகளை பகிர்ந்தளித்தல். ○ பொருத்தமானவாறு ஒழுங்கமைப்பு கட்டியெழுப்பப்பட்டிருத்தல்.	○ வகிபாகங்களுக்கிடையே மோதல் உருவாதல். ○ பிரிவுகளுக்கிடையே சிறந்த இணைப் புக் காணப்படாமை.
நிறுவன வளங்கள்	○ தேவையான அளவு காணப்படல். ○ தரமானதாகக் காணப்படல்.	○ காலங்கடந்த வளங்கள் காணப்படல். ○ வளங்களின் அருமைத்தன்மை ○ தேவையானளவு வளங்கள் காணப் படாமை

பாடசாலையில் உள்ளக சூழல் காரணிகளின் பலங்கள், பலவீனங்கள்

சூழல் காரணிகள்	பலங்கள்	பலவீனங்கள்
மாணவர்கள்	○ கீழ்ப்படிந்து நடத்தல் ○ திறன்களைப் பூரணமாகக் கொண்டிருத்தல்.	○ மனப்பாங்கைக் கற்றலுக்கெதிராகக் கொண்டிருத்தல் ○ பின்னடைவைப் பெற்றிருத்தல
ஆசிரியர்கள்	○ உயர்கல்வித் தகைமையினைப் பெற்றுக்கொள்ளல். ○ கற்பிக்கும் திறனைக் கொண்டிருத்தல். ○ மனிதநேயம் கொண்டிருத்தல்.	○ தேவையான அளவு ஆசிரியர்கள் காணப்படாமை ○ பொறுப்பு, வகைகூறலை ஏற்காமை ○ அர்ப்பணிப்புக் குறைவாகக் காணப்படல். ○ குறைவான பயிற்சி
வகுப்பறையின் இடவசதி	○ மகிழ்ச்சிகரமான சூழல் அமைந்திருத்தல் ○ தேவையான அளவு இட வசதிகள் காணப்படல். ○ வசதிகளைக் கொண்டிருத்தல	○ பழுதடைந்திருத்தல் ○ போதுமானளவு இடவசதி காணப்படாமை
மாணவத் தலைவர்/ தலைவியர	○ சிறப்பான ஆளுமையைக் கொண்டிருத்தல் ○ திறன்களை முழுமையாகப் பெற்றிருத்தல் ○ சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய திறன்	○ கவனயீனமாக இருத்தல் ○ பொறுப்புக்களை ஏற்காமை

வினாக்கள்

01. வணிகமொன்றின் அகச்சூழலில் "பலம்" என்பதனை தோற்றுவிக்கக்கூடிய ஒழுக்கநெறியாகக் கருதக்கூடியது

1. சமூகமட்ட நிகழ்வுகளுக்கு அனுசரனை வழங்குதல்
2. சகல ஊழியர்களையும் சமமாக நடாத்துதல்
3. சமயக் குறியீடுகளை வணிக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாதிருத்தல்
4. முதியோருக்கு மரியாதை செய்தல்
5. விளம்பரப்படுத்தலின் போது ஏனைய வணிகங்களின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தாதிருத்தல்

02. வணிகத்தினுள் காணப்படுகின்ற மரபுகள், பாரம்பரியங்கள், பெறுமானங்கள், பழக்கம் மனப்பாங்கு போன்றவை தொடர்பில் கவனம் செலுத்துதல்.

1. வணிக ஒழுக்க நெறி ஆகும்.
2. வணிக விழுமியம் ஆகும்.
3. ஒழுக்க கோவை ஆகும்.
4. அமைப்பு கலாசாரம் ஆகும்.
5. சமூக கலாசாரம் ஆகும்

03. வணிகச் சூழலில் வாடிக்கையாளர்கள் சார்பான தகவல்கள் வருமாறு

A : வரையறுக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் அதிகளவில் பண்டங்கள் கொள்வனவு செய்தல்.
B : சந்தை மற்றும் பொருட்கள் தொடர்பான வாடிக்கையாளர்கள் அறிவுப் பற்றாக்குறை.
C : வாடிக்கையாளரின் ஒழுங்குபடுத்தும் அறிவு அதிகரித்தல்.
D : வாடிக்கையாளரின் வாழ்க்கைப் பாங்கு
E : வாடிக்கையாளரின் செலவிடத்தக்க வருமானம் குறைவடைதல்.
மேலே தரப்பட்டவற்றுள் வாடிக்கையாளர் சார்பான அச்சுறுத்தல் விடயங்களைக் காட்டுவது எது?
(1) A, C, E (2) A, B, D, E (3) B, D, E (4) C, D, E (5) B, C, E

04. பின்வருவன வணிகம் ஒன்று தொடர்பான சூழல்சார் காரணிகளது சில போக்குகள் ஆகும்.

A. பொருளாதார விலை மட்டத்திலான அதிகரிப்பு
B. தொழில் தருனர் - தொழில் பெறுனர் முரண்பாடுகளில் அதிகரிப்பு
C. போட்டியில் அதிகரிப்பு
D. தொழில் பெறுனர் திரும்பலில் குறைவு
E. நிறுத்தி வைத்த உழைப்புக்களில் குறைவு
F. நுகர்வோர் சங்கங்களின் பலத்தில் அதிகரிப்பு
G. மூலப்பொருட்கள் வீணாகுவதில் குறைவு
H. வயது முதிர்ந்தோர் சனத்தொகையில் அதிகரிப்பு மேலே தரப்பட்டுள்ளவற்றுள் அகச்சூழல் காரணிகளின் போக்குகளை மட்டும் கொண்டுள்ள தொகுதி யாது?
1. A,B,C,D 2. A,D,E,G 3. B,C,E,H 4. B,D,E,G 5. C,F,G,H

இடைவெளிகளை நிரப்புக

01 வணிகச் செயற்பாடுகளின் போது நிறுவனங்களால் கட்டுப்படுத்தக்கூடிய சூழல் காரணிகள் _ _ _ _ _ _ _ _ _ காரணிகள் எனப்படும்.
02 வணிகத்திற்கு வளங்களை வழங்கியுள்ள பிரிவினர் _ _ _ _ _ _ _ _ என அழைக்கப்படுவர்.
03 வணிகத்தில் காணப்படும் அனைவரிடமும் பகிர்ந்தளிக்கப்படுவதும் அடுத்துவரும் சந்ததியினருக்கு ஒப்படைக்கப்படும் நம்பிக்கைகள் பெறுமதிகள், மனப்பாங்குகள் என்பன _ _ _ _ _ _ _ _ எனப்படும்.
04 பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படுபவை அனைத்தும் _ _ _ _ _ _ _ _ எனப்படும்.
05 பயிற்சியற்ற, பொறுப்பற்ற ஊழியர்கள் காணப்படல் வணிகத்திற்கு _ _ _ _ _ _ _ _ ஆகும்.
06 வணிகத்திற்கு தேவையான வளங்கள் தரமானதாகக் காணப்படல் _ _ _ _ _ _ _ _ _ ஆகும்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

07 நுகர்வோர், வழங்குநர், போட்டியாளர்... சூழல் காரணிகளாக கருதப்படுவதுடன் உரிமையாளர், ஊழியர், முகாமையாளர்...................................... சூழல் காரணிகளாகவும் கருதப்படும்.

08 நோக்கத்தை அடைவதில் உதவும் அமைப்பின் சக்திகள் ....எனவும் நோக்கத்தை அடைவதில் பலவீனமான தன்மை..................................எனவும் நோக்கத்தை அடைவதில் உதவும் புறக்காரணிகள் ....எனவும் நோக்கத்தை அடைவதில் இடையூறாக அமையும் புறகாரணிகள் .... எனவும் அழைக்கப்படும்.

09 வணிக மொன்றின் அக மற்றும் புறச் சூழல்களை பகுபாய்வு செய்வதனுடாக இனம் காணப்படும் நான்கு அடிப்படை காரணிகளைக் குறிப்பிடுக

I. ____
II. ____
III. ____
IV. ____

வினாக்கள்

01. அமைப்பு கலாச்சாரம் என்பதனை விளக்கி வணிக நடவடிக்கைகளில் அது எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறது என எடுத்துக்காட்டுக?
02. நிறுவனக் கலாசாரம் என்றால் என்ன என்பதை வியாக்கியானம் செய்க.
03. நிறுவன கலாச்சாரம்" என்பதற்குச் சுருக்கமான அறிமுகத்தைத் தந்து நிறுவன நடவடிக்கைகளில் இது எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனையும் உதாரணங்களுடன் விளக்குக.
04. நிறுவனக் கலாசாரத்தின் பலம் ஒன்றையும் பலவீனம் ஒன்றையும் ஒவ்வொரு உதாரணம் தருவதன் மூலம் விளக்குக.
05. நிறுவனக் கலாச்சாரத்தின் பலம், பலவீனம் ஆகியவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருவதன் மூலம் விளக்குக.

தேர்ச்சி மட்டம் 1.8: வேலைச்சூழற் (அண்மிய சூழல்) காரணிகள் வணிகங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பகுப்பாய்வு செய்வார்.

இல	அண்மிய சூழல் காரணிகள்	விளக்கம்
01	**வாடிக்கையாளர் (நுகர்வோர்)**	○ வணிகத்தின் பொருள்கள், சேவைகளைக் கொள்வனவு செய்வோர் நுகர்வோர்களாவர். ○ நுகர்வாளரின் அறிவு, அவர்களது வருமானம் போன்ற விடயங்கள் சில வணிகங்களுக்கு வாய்ப்புக்களை உருவாக்குவதுடன் சில வணிகங்களுக்கு அவற்றினால் அச்சுறுத்தல்கள் உருவாகும்.
02	**வழங்குநர்**	○ வணிகத்திற்குத் தேவையான வளங்களை வழங்கும் நபர்களும் நிறுவனங்களும் வழங்குநர்கள் ஆவர். ○ வழங்குநர்கள் உரிய நேரத்தில் தரமான பொருள்களை வழங்கல் அல்லது வழங்கா திருத்தல், கழிவு கிடைத்தல், கிடைக்காமை போன்ற காரணிகள் வணிகங்களுக்கு வாய்ப்புக்களைப் போன்றே அச்சுறுத்தல்களையும் உருவாக்கலாம்.
03	**போட்டியாளர்**	○ வணிகம் முன்வைக்கின்ற பொருள்கள் அல்லது சேவைகளுக்குச் சமமான உற்பத்திகளை முன்வைக்கின்ற ஏனைய வணிகங்கள் போட்டியாளர் களாவர். ○ புதிய போட்டியாளர்கள் சந்தைக்குவருதல், சந்தையில் இருக்கும் போட்டியாளர்கள் விலகுதல், போட்டியாளர்கள் அவர்களின் பொருட்கள் சேவைகளுடன் பல்வேறு வசதிகளை வழங்குதல் போன்றன வணிகங்களுக்கு வாய்ப்புக்கள் போன்றே அச்சுறுத்தல்களையும் உருவாக்கும்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

04	**பதிலீட்டுப் பொருள் உற்பத்தியாளர்கள**	○ வணிகம் சந்தையில் முன்வைக்கினிற பொருள் அல்லது சேவைக்கு மாற்றுப் பொருள் அல்லது சேவையினை முன்வைக்கின்றவர்கள் பதிலீட்டுப் பொருள்களை உற்பத்தி செய்வோராவர். ○ பதிலீட்டுப் பொருள்கள் சந்தையில் கூடுதலாகக் காணப்படுதல் வணிகத்திற்கு அச்சுறுத்தலாகும் என்பதுடன் அது வேறு வணிகச் சந்தர்ப்பங்களை உருவாக்கு வதற்கும் காரணமாயமையும்.
05	**சந்தையில் பிரவேசிப்பதற்கு எதிர்பார்க்கின்ற புதிய வணிகர்கள**	○ சந்தையில் பிரவேசிப்பதற்கான எதிர்பார்ப்புடன் இருப்பவர்களும் கூட இருக்கின்ற வணிகத்திற்கு வாய்ப்புக்களையும், அச்சுறுத்தல்களையும் உருவாக்குவர்.

வினாக்கள்

01. வணிகமொன்றின் வாழ்தன்மையை உறுதிப்படுத்தும் அண்மிய சூழல் காரணியாக இருப்பது
    1) போட்டியாளர் 2) வழங்குனர் 3) உரிமையாளர்
    4) எதிர்கால முதலீட்டாளர் 5) வாடிக்கையாளர்

02. வணிகமொன்றின் சமூகப் பொறுப்புகளும், வணிக விழுமியங்களும் கீழே தரப்பட்டுள்ளன.
    A - நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்தல்.
    B - நியாயமாகவும், நேர்மையாகவும் போட்டியிடல்
    C - உண்மையான தகவல்களைப் பரிமாறுதல்.
    D - சூழல் மாசுபடுவதனை இழிவுபடுத்தல்
    E - ஊழியர்களது தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
    F - மற்றவர்களுக்கு தீங்கு ஏற்படாத வகையில் செயற்படல்
    மேற்கூறியவற்றுள் வணிக விழுமியங்களை மட்டும் கொண்டுள்ள தொகுதியினைத் தெரிவு செய்யின் அது,
    1) ABC 2) ACF 3) BCF 4) ADE 5) BDF

தேர்ச்சி மட்டம் 1.9: பேரினச் சூழல் காரணிகள் வணிகங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பகுப்பாய்வு செய்வார்

பேரின சூழல் காரணிகள்	**விளக்கம்**	**உதாரணம்**
பொருளாதார சூழல்	வணிகங்களின் வாழ்தன்மையில் மக்களின் செயற்பாட்டு சக்திகள் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் வணிக நடவடிக்கைகளுக்காக ஏற்க வேண்டி ஏற்படும் கிரயமும் பொருளாதாரக் காரணயின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும்	விலை, பணவீக்கம், வட்டிவீதம், மொத்தத் தேசிய உற்பத்தி, வேலை வாய்ப்பு, வாழ்க்கைச் செலவு, வருமானப் பகிர்வின் முரண்பாடு, சேமிப்பு, முதலீடு.
அரசியல் சூழல்	அரச பிரதிநிதித்துவ நிறுவனங்கள், தற்போது பதவி வகிக்கின்ற அரசின் அரச கொள்கைகள் என்பன வணிகங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்.	• அரசின் அரசியல் முன்மாதிரிகளும் கொள்கைகளும் • திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றல்
சட்டச் சூழல்	அரசின் கட்டளைச் சட்டங்கள், விதிக்கப்படுகின்ற சட்ட விதிகள் என்பன நாட்டிலுள்ள வணிகங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்.	• நுகர்வோர் நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரச்சட்டம் • இலங்கை தரச் சட்டம் • தொழிலாளர் சட்டதிட்டங்கள்
சமூக கலாசார சூழல்	தனிநபர்களிடம் காணப்படும் நம்பிக்கைகள், பெறுமதிகள், சமூக விழுமியங்கள் என்பன சமூக கலாசார சூழலில் உள்ளடங்கும்.	• தனிநபர்களிடம் காணப்படும் நம்பிக்கைகள் • தனிநபர்களிடம் காணப்படும் பெறுமானங்கள் • பழக்கவழக்கங்கள

		• மரபுகள், சம்பிரதாயங்கள் • எண்ணங்களும் எதிர்பார்ப்புக்களும் • சமய நம்பிக்கைகள
தொழிநுட்ப சூழல்	தொடர்பாடல் தொழிநுட்பத்தின் போக்கும் விவசாயம், கைத்தொழில் மருத்துவம் ஏனைய துறைகளில் இடம்பெற்றுள்ள தொழிநுட்ப மாற்றங்கள் என்பன தொழிநுட்ப சூழலுக்குள் உள்ளடங்கும்.	• புதிய தொழினுட்பக் கண்டுபிடிப்புக்கள் • மிக வேகமாகத் தொழினுட்பத்தின் மாற்றங்கள் • தொடர்பாடல் தொழினுட்பம் மாற்றமடைதல் • பொருள்கள் காலம் கடந்தவைகளாதல்
மக்கள் சூழல்	வணிகத்துடன் தொடர்புடைய பிரதான காரணி சனத்தொகையாகும். அதாவது சந்தையானது தனிநபர்களை உள்ளடக்கியதாகும்.	• சனத்தொகையின் அளவு • சனத்தொகை வளர்ச்சி வீதம் • ஆண், பெண் பால் வேறுபாடு • பல்லினச் சமூக அமைப்பு • கல்வி மட்டம் • வயது மட்டம் • குடும்ப சமூக அமைப்பு • மனை அமைப்பு
இயற்கை சூழல்	• இயற்கை வளங்களுக்கு ஏற்படும் பாதகமான நிலைமை தொடர்பில் இன்று பூகோள ரீதியில் அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது. • உலகில் கூடுதலான நாடுகளில் இடம்பெறும் வணிக செயற்பாடுகள் காரணமாக காற்று, நீர், மண் என்பன மாசடைந்துள்ளன. • இயற்கைச் சூழலைச் சிறப்பான நிலைமையினைப் பேணி வணிகக் கருமங் களில் ஈடுபடுவது தொடர்பிலான சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. • இயற்கைச் சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்கள், வணிகக் கருமங்களில் தாக்கத்தை யேற்படுத்து	• இயற்கை வளங்களைக் • கண்டுபிடித்தல் • காலநிலை, வானிலை மாற்றங்கள் பூமியின்அமைவிடம் •இயற்கை அழிவுகள
பூகோள சூழல்	• பூகோள மயமாக்கம் காரணமாக நாடுகளிடையே பொருட்கள் சேவைகளின் பரிமாற்றம் கூடுதலாக இடம்பெறுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. • தனிநபர்களின் கலாச்சாரமும் மாற்றங்களுக்குட்பட்டுள்ளது. இதன் காரணமாக பல்வேறு பொருட்கள் சேவைகள் உலகச் சந்தையில் இடம்பெற்றுள்ளமையினால் பாரிய போட்டியினைக் காணக்கூடியதாகவுள்ளது	• வியாபார ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படல் • வியாபாரக் கூட்டுக்கள் உருவாதல் • உலக அமைப்புக்கள் உருவாதல் • சர்வதேச ரீதியாகச் சட்டதிட்டங்கள் ஏற்படுத்தப்படல

வினாக்கள்

01. பேரினச் சூழல் காரணிகள் சில **X** நிரலிலும், அவற்றுடன் தொடர்புடைய உதாரணங்கள் சில **Y** நிரலிலும் தரப்பட்டுள்ளன.

X	**Y**
A. பொருளாதாரச் சூழல்	1. நம்பிக்கைகள், பெறுமானங்கள், பழக்கவழக்கங்கள்
B. மக்கட் சூழல்	2. உலக அமைப்புக்கள், வியாபார ஒப்பந்தங்கள்
C. தொழில்நுட்பச் சூழல்	3. விலை, பணவீக்கம்,வட்டி வீதம், சேமிப்பு, முதலீடு
D. சமூக, கலாசாரச் சூழல்	4. வயது மட்டம், பால் வேறுபாடு, சனத்தொகையின் அளவு
E. பூகோளச் சூழல்	5. புதிய தொழினுட்பம், தொடர்பாடல் தொழினுட்பம்

X நிரலில் தரப்பட்டுள்ள பேரினச் சூழல் காரணிகளின் வரிசைப்படி **Y** நிரலிலுள்ள உதாரணங்களை

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவுசெய்க.

1. A-3 B-1 C-4 D-5 E-2   2. A-3 B-1 C-4 D-2 E-5
3. A-3 B-4 C-5 D-1 E-2   4. A-1 B-5 C-4 D-2 E-3
5. A-1 B-3 C-4 D-2 E-5

02. COVID-19 எனப்படுகின்ற கொரோனா வைரஸானது உலக நாடுகளையே அச்சுறுத்தியுள்ளது. இதன் தாக்கம் பின்வரும் எப் புறச்சூழல் காரணிகளுக்கு பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. என்பதனை தெரிக?

1) கொரோனாவினால் இறப்பு வீதம் அதிகரித்துச் சென்றமை.	A. தொழில்நுட்ப சூழல்
2) தனிமைப்படுத்தல் சட்டங்கள் பிரகடப்படுத்தப்பட்டன.	B. மக்கட் சூழல்
3) பங்குச் சந்தையில் பங்குகளின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டமை.	C. அரசியல் சட்ட சூழல்
4) மக்களின் பழக்கவழக்கங்களில் மாற்றம் ஏற்பட்டமை.	D. சமூக கலாசார சூழல்
5) பொறியியல் மாணவர்களின் தொற்று நீக்கி இயந்திர கண்டுபிடிப்பு.	E. பொருளாதார சூழல்

1. A,E,C,D,B 2. A,C,D,E,B 3. B,C,A,D,E 4. B,C,E,D,A 5. D,C,E,B,A

03. சமூக கலாசார சூழலுக்கு உரித்தான அடிப்படை அம்சங்களை உள்ளடக்கங்கள் சரியாக உள்ள தொகுதியைத் தெரிவு யாது?
1. நம்பிக்கைகள், விழுமியங்கள், தொழிநுட்பம், நியமங்கள்
2. விழுமியங்கள், நிறுவனங்கள், வயதுக்கட்டமைப்புகள், பாரம்பரியங்கள்
3. பழக்கவழக்கங்கள், விழுமியங்கள், நிறுவன கட்டமைப்புகள், பாரம்பரியங்கள்
4. நம்பிக்கைகள், விழுமியங்கள், பழக்கவழக்கங்கள், ஒழுங்குவிதிகள்
5. நம்பிக்கைகள், விழுமியங்கள், பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள

04. வணிகச் சூழல்சார் விசைகள், காரணிகள் மற்றும் அவற்றின் செல்வாக்குகளைச் சரியாகக் குறிப்பிடும் கூற்று எது?

I. வணிகமொன்றின் கணினி இயக்குநர்கள் அகக் காரணியாகக் காணப்படுவதுடன் அவர்களின் திறன்கள் தொடர்பான பற்றாக்குறையானது வணிகத்துக்கு அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது.

II. போட்டியாளர்களின் அதிகரிப்பானது வணிகமொன்றுக்கு அச்சுறுத்தலாகக் காணப்படுவதுடன் அது அண்மித்த வெளிவாரச் சூழலின் ஒரு விசையாகக் காணப்படுகின்றது.

III. வெளிநாட்டு நாணயமாற்று வீதம் குறைவடைதலானது ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு வாய்ப்பாகக் காணப்படுவதுடன் அது அனுமதித்த வெளிவாரிச் சூழலின் ஒரு விசையாகக் காணப்படுகின்றது.

IV. நிதி நிறுவனங்கள் பேரண்டச் சூழலின் ஒரு விசையாகக் காணப்படுவதுடன் அவற்றிடையே காணப்படும் கடுமையான போட்டி வணிகங்களுக்கான ஒரு வாய்ப்பாகக் காணப்படுகின்றது.

V. நிறுவனம்சார் கட்டமைப்புக்குள்ளேயான சரியான தொடர்பாடலானது நிறுவனத்துக்கான பலமாகக் காணப்படுவதுடன் அது அண்மித்த வெளிவாரிச் சூழலின் ஒரு விசையாகக் காணப்படுகின்றது.

வினாக்கள்

01. வணிகத்தின் பேரண்டச் சூழல் தொடர்பான விசைகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஏன் வணிக முயற்சியாளர்கள் அதன் மீது கவனம் செலுத்த வேண்டும் என குறிப்பிடுக
02. பூகோளச் சூழல் ஒன்றின் மூலம் உள் நாட்டு வணிக நிறுவனம் ஒன்றிற்கு ஏற்படும் வாய்ப்புக்கள், இரண்டினையும், அச்சுறுத்தல் இரண்டினையும் குறிப்பிடுக
03. பின்வரும் பேரண்டச்சூழல் காரணிகளுக்கிடையிலான இடைத்தொடர்பை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருவதன் மூலம் சுருக்கமாக விளக்குக.
(அ) இயற்கைச்சூழல் - சமூக கலாச்சாரச்சூழல்
(ஆ) அரசியற்சூழல் - பொருளாதாரச்சூழல்
04. பூகோளமாதல் என்றால் என்ன என்பதனை வியாக்கியானம் செய்வதுடன் அது உள்நாட்டு வணிகங்கள் மீது ஏற்படுத்தும் சார்பான மற்றும் எதிரான செல்வாக்குகள் இரண்டு வீதம் விவரிக்குக

தேர்ச்சி 2.0

வணிகச் சூழலுக்கு இயைபாக்கமடைவதற்கு வணிகமானது சமூகரீதியான பொறுப்புக்கள், விழுமியங்கள் மீது கவனம் செலுத்தும் முறையினைக் கேட்டறிவார்.

தேர்ச்சி மட்டம் 2.1: வணிகங்களினால் சமூகரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை மதிப்பார்.

சமூகப்பொறுப்பு

வணிகத்துடன் தொடர்புடைய அனைத்து அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும் இயன்றளவில் நியாயமொன்று நிறைவேற்றக்கூடிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளல் சமூகப்பொறுப்பாகும்.

கூறியவர்கள்	வரைவிலக்கணம்
(World business council for sustainable development)	முழுமையான சமூகத்தினதும், பிரதேச சமூகத்தினதும், ஊழியர்களினதும், அவர்களது குடும்பங்களினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், நாட்டின் பொருளாதார விருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்றதும் ஒழுக்க சீலர்களாக நடந்துகொண்டு தொடர்ச்சியாக வணிகத்தின் வாழ்தன்மைக்கு அர்ப்பணிப்புச் செய்தல் என்பன வணிகங் களின் சமூகரீதியான பொறுப்பாகும்.
Mallen Baker	''சமூகத்தில் நேரான தாக்க மொன்றை உருவாக்குவதற்கு வணிகச் செயற்பாடுகளை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது என்பது தொடர்பான கருத்தொன்றே சமூகப் பொறுப்பாகும்''
Narayan Murthy	''வாடிக்கையாளர், ஊழியர்கள், சமூகம், அரசு, சூழல் போன்ற அனைத்து அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும் நியாயமான வகையில் கருமமாற்றிப் பங்காளர்களுக்கு உச்சப் பெறுமானமொன்றை உருவாக்கிக் கொடுப்பதே சமூக ரீதியான பொறுப்பாகும்''
ஐக்கிய அமெரிக்கக் குடியரசு (USA)	''தனது வணிக நடவடிக்கைகள் தொடர்பாகவும், அதன் மூலம் சமூகத்திற்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாகவும் தனிப்பட்ட ரீதியிலான வணிகப் பொறுப்புக்கள் சமூகப் பொறுப்புகளாகும்.''
பிலிப்பைன்ஸ்	''வணிக சமூகத்திற்கு மீள வழங்கப்படுபவைகளே'' சமூக ரீதியான பொறுப்பாகும்.

வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும் பொதுவாக சமூகத்திற்கும் அழுத்தத்தை ஏற்படுத்தும் காரணிகள்

- வணிகப்போட்டி
- பூகோளமயமாதல்
- இலத்திரனியல் வணிகம்
- சூழல் மாசடைதல்

வணிகம் சமூகப்பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய தரப்பினரும் அவர்களுக்காக நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்புக்களும்

வாடிக்கையாளர்	உரிமையாளர்	ஊழியர்	சமூகம்
நியாயமாக நடந்து கொள்ளல்	நியாயமாக உழைப்பை பெற்றுக் கொள்ளல்	வேலை வாய்ப்பிற்கு பங்களிப்பு செய்தல்	சமத்துவமான நிலை
சேதத்தை இழிவுபடுத்தல்	பொருளாதார நலன்களை பெற்றுக்கொள்ளல்	வரி செலுத்தலை சரியாக மேற்கொள்ளல்	சிறந்த ஊழியர் தொடர்பு
உரிமைகளை பாதுகாத்தல்	வினைத்திறனாகவும் நேர்மையாகவும் முகாமைத்தவ கருமங்களைநிறைவேற்றல்	கழிவுப்பொருள் முகாமைத்துவம்	தொழில் பாதுகாப்பு
		சமூக நலன்புரிச் சேவை	சுகாதார வசதிகள
		பசுமை உற்பத்தி	
		சூழலை நேசிப்பவராக கருமமாற்றுதல்	

சமூகப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதன் மூலம் வணிகத்திற்குப் கிடைக்கும் நன்மைகள்

- வணிகத்தின் வாழ்தன்மை உறுதிப்படுத்தப்படல்.
- வணிகத்தின் நன்மதிப்பு (வணிகம் பற்றிய பிரதிவிம்பம்) விருத்தியடைதல்.
- வணிகம் தொடர்பான நம்பகத்தன்மை உறுதி செய்யப்படுதல்.
- வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த முடிதல்.
- வணிகத்தின் நோக்கம், குறிக்கோள்கள் என்பவற்றை நிறைவேற்றுவது இலகுவாயிருத்தல்.
- ஊழியர்களைக் கவரலாம்
- முதலீட்டாளர்களைக் கவரலாம்
- அழுத்தம் கொடுக்கும் குழுக்களின் செல்வாக்குகளைக் குறைக்கலாம்
- அரச ஊக்குவிப்புக்களைப் பெறலாம்

சமூகப் பொறுப்பு தொடர்பாக வணிகங்கள் கையாளுகின்ற உபாயங்கள்

01. அறிக்கையிடுதல் - முடிவுக்கணக்குகளை பிரசுரித்தல்
02. நிதி நிறுவனங்கள் தமது திரவத்தன்மையை தரவரிசைப்படுததல் மூலம் பகிரங்கப்படுத்தல். (Eg- AAA , BBB ..)
03. ஒழுக்கக் கோவைகளை வகுத்து அறிவுறுத்தல், பின்பற்றச் செய்தல்
04. கொள்கைக் கைநூல்களை வெளியிட்டு நிறுவன கலாசாரத்தைப் பேணல்
05. கருமங்கள் வெளிப்படையாக இடம்பெறத் தூண்டுதல்.
06. வகை கூறல் தொடர்பான தேவைகளை முன்னிறுத்தல்
07. அபிப்பிராயங்கள், விமர்சனங்களை வரவேற்றல் (Eg – அபிப்பிராயப் பெட்டி)

சமூகப்பொறுப்பு தொடர்பான தரங்கள்

ISO – 14000, 14001	**Environmental management systems**
ISO – 26000	**Guidance on social responsibility**
AA – 1000	**Accountability தரம்**
SA 5000	**Social Accountability தரம்**
FISE – 4	**Good Index**

வினாக்கள்

01. வணிகங்கள் நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஊழியர்களுக்கு வணிகங்கள் நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்பு ஒன்றிணை தெரிக?
    1. நியாயமான உழைப்பினைப் பெற்றுக் கொடுத்தல்.
    2. உரிமைகளைப் பாதுகாத்தல்.
    3. வேலை வாய்ப்பிற்கு பங்களித்தல்.
    4. சமத்துவமான நிலை
    5. நியாயமாக நடந்து கொள்ளல்.

02. முகாமையாளர் ஒருவர் ''வணிகத்திற்கான சாதாரண இலாபத்தினை உழைக்கின்ற அதைவேளை நிறுவனத்திறகு அருகாமையில் வசிப்பவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதும் தன்னடைய பொறுப்பாகும் எனக் குறிப்பிடுகின்றார். இக்கூற்றின்படி மிகச்சிறப்பாக எடுத்துக்காட்டப்படும் நிறுவனத்தின் பொறுப்பு கூறத்தக்க தரப்பினர்
    1. சமூகமும் வாடிக்கையாளர்களும் ஆவர்
    2. உரிமையாளர்களும் ஊழியர்களுமாவர்
    3. உரிமையாளர்களும் சமூகமுமாகும்
    4. உரிமையாளர்களும் வாடிக்கையாளர்களும் ஆவர்
    5. உரிமையாளர்களும் அரசாங்கமுமாகும்

03. இலாபத்தைப் பெற்றுக்கொள்ளவதற்கு மேலதிகமாக வணிகத்தால் முழுச் சமூகத்துக்கும் நியாயமாகக் கருமமாற்றுதல் .... எனக் குறிப்பிடப்படுவதுடன் தன்னுடன் கருமமாற்றும் எல்லாத் தரப்பினருக்கும் நன்மை ஏற்படும் முறையில் கருமமாற்றுதல .... எனவும்குறிப்பிடப்படும்.

04. வரையறுக்கப்பட்ட தனியார் வங்கி ஒன்றினால் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றும் முறைகள் சில கீழே தரப்படுகின்றன.

A. சேவை பெறுவோரின் உரிமைகளை பாதுகாத்தல்.

B. தனது வங்கி பணியாளர்களுக்கு சிறந்த தொழிற் பாதுகாப்பினை வழங்குதல்.

C. வங்கி நடவடிக்கைகளின் போது சூழலை நேசிப்பவராக கருமமாற்றுதல்.

D. வங்கி முகாமைத்துவக் கருமங்களை வினைத்திறனாகவும் நேர்மையாகவும் நிறைவேற்றல்.

மேற்குறிப்பிட்ட சமூகப் பொறுப்புக்கள் குறித்த வங்கியின் எவ்வெவ் தரப்பினருக்கு நிறைவேற்றப்படுகின்றது என்பதனை கீழே உள்ள இடைவெளியில் குறிப்பிடுக.

1. _
2. _
3. _
4. _

தேர்ச்சி மட்டம் 2.2: சூழலை நேசிக்கக்கூடியதாகக் கருமமாற்றி நிலையான அபிவிருத்திக்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்கின்ற முறையினை மதிப்பிடுவார்.

நிலைபேறான அபிவிருத்தி (Sustainable development)

நிலைபேறான அபிவிருத்தி என்பது எதிர்கால பரம்பரையினரின் தேவைகளை நிறைவு செய்வதற்கு இருக்கின்ற உரிமையினைப் புறக்கணிக்காது நிகழ்காலத் தேவைகளை அடைந்து கொள்வதற்கான அபிவிருத்தியாகும்.

நிலைபேறான அபிவிருத்தி மூன்று சமமான பிரதான கோபுரங்கள்

01. பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி (Economic sustainable development)
02. சூழல் நிலைபேறான பாதுகாப்பு (Environment sustainable protection)
03. சமூக நிலைபேறான அபிவிருத்தி (Social sustainable development)

நிலைபேறான அபிவிருத்தி வகைகள்	விளக்கம்	வணிகம் கவனம் செலுத்த வேண்டிய விடயம்	வணிகம் கருமமாற்ற வேண்டிய விதம்
பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி	நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியின் போது வளப் பயன்பாட்டினைக் குறைத்து வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் மனித நலனை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	• பொருளாதார விருத்தியும் நிலைப்பாடும். • பூரண வேலைவாய்ப்பு • சர்வதேச வியாபாரம் • வினைத்திறனான வளப் பயன்பாடு	• இடர் முகாமைத்துவம் • வேலைவாய்புக்களை உருவாக்குதல் • பொருளாதார விருத்திக்கு உரமூட்டுதல் • ஊழியர் நலனோம்புகள் • பங்குதாரர்களின் அனுகூலங்களை விருத்தி செய்தல் • உள்நாட்டுப் பொருளாதார விருத்திக்கான முதலீடு • புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்தல்

			• தொழினுட்பத்தை விருத்தி செய்தல் • நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் • பரிமாற்றம் மற்றும் கொடுக்கல் வாங்கற் செயற்பாடுகளை விருத்தி செய்தல். • உற்பத்திச் செயல்முறைகளை ஊக்குவித்தல
சூழல் நிலைபேறான பாதுகாப்பு	மனிதனின் அடிப்படைத் தேவைகளாகிய காற்று, நீர், உணவு, வீடு என்பன தரமான தாகக் காணப்படுவதுடன் அவற்றைப் பாதுகாத்துப் பேணிச் செல்வதன் மூலம் மனிதனின் அடிப்டைத் தேவைகளை நிறைவு செய்தல் சூழல் நிலைபேறான பாதுகாப்பின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன.	• வளப்பயன்பாடு • இடர் முகாமைத்தவம் • மூலப்பொருட்களும் கழிவுப்பொருள் முகாமைத்துவமும் • இயற்கையானதும் கலாசார வடிவமைப்புக்களும்	• சூழல் நேயப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் சூழல் • சட்டதிட்டங்களுக்கமைய கருமமாற்றுதல் • ஆபத்து விளைவிக்கும் பொருட்களை பாதுகாப்பாக பயன்படுத்துதல். • சூழல் நேயப்போக்குவரத்து முறைகளை பயன்படுத்தல் • கழிவுப் பொருள் முகாமைத்துவம் • மூலப்பொருள்கள், வலு, நீர் போன்ற வளங் களைப் பாதுகாத்துக் கருமமாற்றுதல். • ஆபத்து விளைவிக்கும் பொருள்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துதல். • நீர், காற்று, மண் போன்றவற்றின் மாசடைதலைக் குறைத்தல். • உயிரினங்களின் பல்லினத்தன்மையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். • சூழல் சட்ட திட்டங்களுக்கமைய கருமமாற்றுதல். • சூழல் பாதுகாப்பு / சூழலை நேசிக்கும் கருமங்களின்போது அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து கருமமாற்றல். • சூரிய சக்தி போன்ற சூழலுக்குத் தீங்கிழைக்காத வலுச்சக்திகளைப் பயன்படுத்தல்.
சமூக நிலைபேறான அபிவிருத்தி	மக்களின் தேவைகள் சமமானதாகவும் நியாயமான வகையிலும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். நிலைபேறான சமூக அபிவிருத்தி	• கலாசார சூழலை பாதுகாத்தல் • மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் • ஊழியர் தொடர்பு	• மானிடத் பல்லினத்தன்மைகளுக்கு மதிப்பளித்து கருமமாற்றல் • சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பங்களிப்பு செய்தல். • சட்டத்தையும், சமாதானத்தையும்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

	இந்நிலைமையினை உறுதிப்படுத்துவதற்கு சமத்துவ நிலை, சமூக மூலதனம், சமூக ஒன்றிணைப்பு, மக்கள் பங்களிப்பு மற்றும் அபிவிருத்தி, மனித உரிமைகள், சமூக பொறுப்பு, சமூக நியாயம், சமூகத்திலுள்ள சகலருக்கும் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்.	• சர்வதேச ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்	பாதுகாப்பதற்கு பங்களிப்பு செய்தல் • மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு பங்களிப்பு செய்தல். • பல்லினத் தன்மை கொண்ட கலாசாரத்திற்கு மதிப்பளித்தலும், அவற்றைப் பாதுகாப்ப தற்குப் பங்களிப்புச் செய்தலும்

நிலைபேறான தன்மைக்கான 4R எண்ணக்கரு

நவீன சமூகத்தின் உற்பத்தி, நுகர்வு போன்ற செயற்பாடுகள் காரணமாக நாளாந்தம் அளவுக்கதிகமான கழிவுப் பொருள்கள் சேர்வதானது பூகோள ரீதியான பிரச்சினை யொன்றாக மாறி உள்ளது.

4R எண்ணக்கருப் பிரயோகத்தினூடாக நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு முயற்சி செய்வது தொடர்பாக சர்வதேச ரீதியாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

- மீள்சுழற்சி (Recycle)
- மீள்பாவனை (Reuse)
- பாவனையைக் குறைத்தல் (Reduce)
- மீள்உருவாக்கம் (Replace)

மீள்சுழற்சி (Recycle)

கழிவுப் பொருள்களை வகைப்படுத்தி வேறுவகையான பொருளொன்றை உற்பத்தி செய்யக்கூடிய பொருளொன்றாக மாற்றுதல் இங்கு இடம்பெறும். இங்கு பொருள்களில் காணப்படும் பௌதீக நிலைமையில் மாற்றம் செய்யப்படும். மீள்சுழற்சியினை இரு முறைகளில் வெளியீடுகள் கிடைக்கக்கூடியவாறு மேற்கொள்ள முடியும்.

• குறைந்த பெறுமதி கொண்ட மூலப்பொருளொன்றை உயர் பெறுமானமுடைய உற்பத்தி பொருள் எனும் நிலைக்கு மாற்றுதல். (Upcycle)

உதாரணம்: வைக்கோலிலிருந்து கடதாசி உற்பத்தி செய்தல்.

• உயர் பெறுமானம் கொண்ட உற்பத்தியினைக் குறைந்த பெறுமானம் கொண்ட மூலப்பொருள் என்ற நிலைக்கு மாற்றுதல் (Low cycle)

உதாரணம்: யப்பான் பாவனையிலிருந்து ஒதுக்கப்படுகின்ற வாகனங்களை உடைத்து இரும்புகளாக மாற்றுதல்.

மீள்பாவனை - (Reuse)

மீண்டும் மீண்டும் பயன்படுத்துதல் (Reuse) உற்பத்தி நடவடிக்கையின்போது அல்லது நுகர்வுக் கருமத்தின்போது தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் பாவனைக்கு எடுத்தல் இதன் பொருளாகும்.

உதாரணம்: உணவுப்பொதி செய்யும் பொலித்தீன்களுக்குப் (Lunch Sheets) பதிலாக உணவுப்பெட்டியினைப் (Lunch Box) பயன்படுத்துதல்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

பாவனையைக் குறைத்தல் (Reduce)

சூழலில் அகற்றப்படும் கழிவுப்பொருள்களின் அளவினை இழிவுபடுத்துவதே இதன் கருத்தாகும். உற்பத்தி அல்லது நுகர்விற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பொருட்களில் அகற்றப்படும் பொருள்களின் அளவினைக் குறைப்பதன் மூலம் இக்கருமத்தை இலகுபடுத்தலாம். அதேபோன்று சூழலைப் பாதிக்கக்கூடிய பொருட்களை நீக்குதல், நிராகரித்தல், பயன்படுத்தாதிருத்தல் என்பவற்றின் மூலம் நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யலாம்.

உதாரணம்: - பொதியொன்றின் பொதி இடலுக்காக அழிவடையாத பொலித்தீன்களைப் பயன்படுத்தாதிருத்தல். - சுத்தமான நீரினை பிளாஸ்திக்குப் பொதிகளில் இடாதிருத்தல்.

மீள்உருவாக்கம் (Replace)

உற்பத்திக் கருமத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற இயற்கை வளங்களில் மீள்உருவாக்கம் செய்யக்கூடிய வளங்களை மீண்டும் சூழலிலுள் உருவாக்குதல் என்பது இதன் கருத்தாகும்.

உதாரணம்:

- காட்டிலுள்ள மரப் பலகைகளை மூலப்பொருளாகப் பயன்படுத்து கின்ற நிறுவனமொன்று காடுகளில் மரங்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றை ஆரம்பித்தல்.
- மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் வணிகமொன்று மீள்வளர்ப்பை மேற் கொள்ளல்.

வணிக நடவடிக்கைகளின் பாதகமான தாக்கங்கள்

- அதிக இலாப எதிர்பார்ப்புடன் தரத்தில் குறைந்து பொருள்களை ஏற்றுமதி செய்தல்.
- கூடிய போட்டித்தன்மையான நிலைமைகளில் நுகர்வாளர்களை ஏமாற்றுதல்.
- ஊழியர் நலனோம்பு தொடர்பில் கூடிய அக்கறை செலுத்தாமை.
- இயற்கை வளங்களை வீணடிக்கக்கூடியவாறு உற்பத்தி நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.
- சூழல் மாசடையக்கூடியவாறு கழிவுப்பொருட்களை அகற்றல்.
- எமது நாட்டின் சமூக, கலாசாரங்களுக்கு ஒவ்வாத வகையில் வியாபார விளம்பரங் களை மேற்கொள்ளல்.
- சமூக கலாசாரத்திற்குப் பொருந்தாத வகையில் ஆடை வடிவமைப்புக்களை உருவாக்கல்.

வினாக்கள்

01. வணிகமானது சமூக கலாசாரம் நிலைபேறானது என்பதனை உறுதி செய்து கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளாக அமைவது,
    1) வேலை வாய்ப்புக்களை உருவாக்கல், புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்தல்.
    2) மானிடத் தன்மைகளுக்கு மதிப்பளித்தல், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல்.
    3) சூழல் நேயப் பொருட்களை கொள்வனவு செய்தல், கழிவுப் பொருள் முகாமைத்துவத்தினை மேற்கொள்ளல்.
    4) சமத்துவத் தன்மையுடன் கருமமாற்றல், தொழில்நுட்பத்தை விருத்தி செய்தல்.
    5) உயிரினங்களின் பல்லினத்தன்மையினை பாதுகாத்தல், ஊழியர் நலனோம்புகளை மேற்கொள்ளல்.

02. சமூக கலாசார நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக வணிகங்கள் கவனம் செலுத்த வேண்டிய காரணி பின்வருவனவற்றுள் எது?
    1. இடர் முகாமைத்துவம்.
    2. கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின் போது 4R எண்ணக்கருவினைப் பயன்படுத்துதல்.
    3. உற்பத்தி செயன்முறையை ஊக்குவித்தல்.
    4. புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்தல்.
    5. மனித மூலதனத்தை பராமரித்தல்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

03. கழிவுப் பொருட்களை வகைப்படுத்தி வேறுவகையான பொருளொன்றை உற்பத்தி செய்யும் போது வைக்கோலில் இருந்து கடதாசி உற்பத்தி செய்தல்.. ....எனவும் பாவனையில் இருந்து ஒதுக்கப்படுகின்ற வாகனங்களை உடைத்து இரும்புகளாக மாற்றுதல்.. எனவும் அழைக்கப்படும்.

வினாக்கள்

01. நிலைபேறான அபிவிருத்தி என்றால் என்ன?
02. சூழலின் நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு வணிகங்கள் கவனம் செலுத்தவேண்டிய விஷேட விடயங்கள் நான்கும் எவை?
03. 4R எண்ணக்கரு முறைமையினைக் குறிப்பிட்டு அதில் மீள் சுழற்சி பற்றி விளக்குக.

தேர்ச்சி மட்டம் 2.3 வணிகங்களின் வெற்றிக்கு ஒழுக்க விழுமிய முறைமை யொன்றின் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்துவார்.

வணிக ஒழுக்க விழுமியம்

வணிகம் தன்னுடன் கருமமாற்றுகின்ற சகல தரப்பினர்களுக்கும் நன்மைபயக்கக்கூடிய முறையில் நல்லவை, தீயவை தொடர்பாக விளங்கிச் செயற்படல், வணிக ஒழுக்க விழுமியங்கள் எனப்படும்.

வணிகங்கள் பின்பற்ற வேண்டிய ஒவ்வொரு துறை சார்ந்த ஒழுக்கநெறிகள்

துறைகள்	ஒழுக்கநெறிகளுக்கான உதாரணங்கள்
உற்பத்தி சார்ந்த ஒழுக்க நெறி	• உடல்நலத்துக்குக் கேடான உற்பத்திகளைத் தவிர்த்தல். • கதிர்வீச்சு அதிகம் கொண்ட உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யாதிருத்தல் • சரியான பாவனைக்காலத்தை(Expiry Date) பொதிகளில் இடுதல். • நீண்டகால களஞ்சியப்படுத்தலுக்கான இரசாயனப் பொருள் இடுவதனைத் தவிர்த்தல். • சூழலை மாசுபடுத்தாத கொள்கலன்களைப் பயன்படுத்துதல் • சுட்டுத்துண்டுகளில் (Label) பொருளின் உள்ளடங்கங்களை உண்மையாகப் பிரசுரித்தல்.
விவேகச் சொத்துக்கள் சார்ந்த ஒழுக்க நெறி	• ஆக்கஉரிமை, வெளியீட்டு உரிமைகளைப் பயன்படுத்துதல் • தொடர்புடைய சட்டங்களை வணிகம் மீறாது இருத்தல். • ஏனைய நிறுவன தொழில் இரகசியங்களைத் திருடாதிருத்தல். • வேறு நிறுவனங்களின் பயிற்சி பெற்ற ஊழியர்களை வேலைக்கு அமர்த்தாது இருத்தல்.
சந்தைப்படுத்தல் சார்ந்த ஒழுக்க நெறி	• நியமத்தரங்களை (ISO, SLS) அனுசரித்தல், கலப்படங்களைத் தவிர்த்தல் • விலை அல்லது காலாவதித் தினங்களில் மாற்றம் செய்யாதிருத்தல் • உத்தரவாத நிபந்தனைகளை உரியவாறு நிறைவேற்றுதல். • முறையற்ற விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல் • பிழையான விலையிடல் முறைகளை பின்பற்றாதிருத்தல் • போட்டி நிறுவனங்களைப் பாதிக்கும் வகையிலான விளம்பரங்களை மேற்கொள்ளாதிருத்தல • ஏமாற்று / போலி விளம்பரங்களைத் தவிர்த்தல்

மனிதவளம் சார்ந்த ஒழுக்க நெறி	• தொழில் வழங்குனர், தொழில் பெறுநர்களின் உரிமைகள் கடமைகளைப் பாதுகாத்தல். • ஊழியர்களின் இனம், குலம், சமயம், ஆண், பெண் எனும் வகையிலான பாகுபாடு காட்டாமை • வேலை இடங்களில் ஊழியர் பாதுகாப்பை உறுதிப்படுத்தல். • போதுமான சுகாதார பொழுதுபோக்கு வசதிகள் பேணல் • சப்பாத்து, சீருடை, தொப்பி, முகக் கவசம் போன்றவைகளை வழங்குதல். • வேலைநேரம், ஓய்வு விடுமுறை போன்ற நியதிகளை நிறைவேற்றுதல்.
கணக்கீட்டு சார்ந்த ஒழுக்க நெறி	• பற்றுச்சீட்டு, ஆவணங்களை வழங்குதல் • உரிய (மூல) ஆவணங்களைப் பயன்படுத்துதல் • சரியான பதிவுகளைச் செய்தல் • பதிவுகளில் மோசடி, திருத்தங்கள் செய்யாதிருத்தல்
நிதியிடல் சார்ந்த ஒழுக்கநெறி	• சொத்துக்களின் பெறுமதிகளை உயர்த்திக் காட்டுவதைத் தவிர்த்தல் • செலவுகளை அதிகரித்துக் காட்டுதல் அல்லது வரி செலுத்த வேண்டிய இலாபங்களை குறைத்துக் காட்டுவதைத் தவிர்த்தல். • செலாவணி, மோசடி, வரி ஏய்ப்பு செய்யாமை • இரகசிய அல்லது உள்ளக பங்குச்சந்தை செயற்பாடுகளை அணுகாமை • முறைகேடான கொடுப்பனவு, பெறுவனவுகளைச் செய்யாமை.

வணிகங்கள் ஒழுக்கநெறியினைப் பின்பற்றுவதால் வணிகத்திற்கு கிடைக்கும் அனுகூலங்கள்

01. வணிகம் தொடர்பில் வாடிக்கையாளரின் நம்பிக்கையை கட்டியெழுப்பலாம்
02. போட்டி நிலைமைகளுக்கு சிறப்பாக முகங்கொடுத்து வணிகத்தின் நிலைப்புத் தன்மையை உறுதிப்படுத்தலாம்.
03. வணிகத்தினுள் இடம்பெறும் நிதி மோசடிகளை தவிர்க்கலாம்.
04. சிறந்த மனிவள முகாமையை மேற்கொள்ளலாம்.

வணிக ஒழுக்க விழுமிய முறைமையொன்றைக் கட்டியெழுப்பும்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

தரப்பினர்	விளக்கம்
வணிகம்	வணிகத்தின் தன்மை என்ன? பொருள் உற்பத்தி வணிகமா? சேவை வழங்கும் வணிகமா? சிற்றளவு வணிகமா? பாரியளவு வணிகமா? போன்றவைகளைக் கவனத்தில் கொள்ளல்.
வாடிக்கையாளர்	வாடிக்கையாளரின் கேள்விப்போக்கு, தொடர்பாடல், சமய சமூகக் கலாசாரத்துடன் தொடர்புடைய விடயங்களில் கவனம் செலுத்துதல்.
ஊழியர்	எந்த மட்டத்திலுள்ள ஊழியர்கள், அவர்களின் சூழல், தேவைகள், விருப்பங்கள் என்பவற்றைக் கவனத்தில் கொள்ளல்.
போட்டியாளர்	போட்டியாளர் காணப்படுகின்றார்களா? அவர்கள் பின்பற்றும் ஒழுக்க விழுமியங்கள் எவை? என்பவை தொடர்பில் கவனம் செலுத்துதல்.
சமூகக் கலாசாரம்	பல்லினச் சமூகத்தில் சனத்தொகையினுள் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கலாசார விழுமியங்கள், பெறுமானங்கள் துணைக் கலாசார விழுமியங்கள் என்பவை தொடர்பில் கவனம் செலுத்தி ஒழுக்க விழுமிய முறைமையினை உருவாக்கல்.
அமைப்புக் கலாசாரம	வணிகத்தினுள் காணப்படுகின்ற மரபுகள், பாரம் பரியங்கள், பெறுமானங்கள், பழக்கம், மனப்பாங்கு போன்றவைகள் தொடர்பில் கவனம் செலுத்துதல்.
நடைமுறை ரீதியானது	ஒழுக்க விழுமிய முறையொன்றைத் தயாரிக்கும் பொழுது ஒழுக்க விழுமிய முறைமையினை நடை முறை ரீதியாகச் செயற்படுத்துவதற்கான ஆற்றல் காணப்படுகின்றதா என்பது தொடர்பில் கவனத்தில் கொள்ளல்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

ஒழுக்க முறைமை / ஒழுக்க விழுமியக் கோவை

வணிகம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட ஒழுக்க விழுமியத்தினை எழுத்து வடிவில் காட்டும்போது அது ஒழுக்க முறைமை / ஒழுக்க விழுமியக் கோவை என்றழைக்கப்படும்.

வினாக்கள்

01. வணிகநிறுவனம் தனது போட்டியாளர்களைக் கருத்திற்கொண்டு உருவாக்கும் ஓர் ஒழுக்கநெறி.
    1. சகல ஊழியர்களையும் சரியாக நடத்துதல்
    2. விளம்பரப்படுத்தலின் போது ஏனைய வணிகங்களின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தாதிருத்தல்
    3. சமய குறியீடுகளை வணிக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாதிருத்தல்
    4. உயர்தரமுடைய பொருட்களை வழங்குதல்
    5. முதியோரை கனம் பண்ணுதல்

02. வணிகம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட ஒழுக்க விழுமியத்தினை எழுத்து வடிவில் காட்டும் போது அது _ என்றழைக்கப்படும்.

03. நிலைபேறான அபிவிருத்தியின் மூன்று அடிப்படைகளாவன பொருளாதார, _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ மற்றும் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ அபிவிருத்தி ஆகியனவாகும்.

பகுதி - II

01. வணிகக் ஒழுக்கக் கோவை ஒன்றினை கட்டியெழுப்பும் போது கருத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் யாவை?
02. வணிகம் சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் தேவைப்பாடு தொடர்பாக கூடிய அவதானமொன்று தற்காலத்தில் விருத்தியடைந்துள்ளது.

    I. வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும், சமூகத்திற்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் காரணிகள் பல வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன.அவ்வாறான காரணிகளை குறிப்பிட்டு விளக்குக?

    II. சமூக கலாசாரம் நிலைபேறானது என்பதனை உறுதி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளைக் குறிப்பிடுக?

    III. வணிகங்கள் வணிக ஒழுக்கத்தை எவ்வாறு வாடிக்கையாளர்கள்இ சந்தைப்படுத்தல், கணக்கீடு மற்றும் மனிதவளங்களில் பின்பற்றப்படுகின்றன என்பதனை உதாரணம் மூலம் விளக்குக?

    IV. இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் அண்மையில் நிவாரண உதவியாக உலர் உணவுப் பொருட்களை பொது மக்களிற்கு வழங்கியிருந்தது இதனால் இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கும் அனுகூலங்கள் எவை?

03. வணிக ஒழுக்க விழுமியம் என்றால் என்ன? இதனை வணிகங்கள் ஏன் பின்பற்ற வேண்டும்? விளக்குக

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

01. வணிகமொன்றின் சமூகப் பொறுப்புக்கள் சில கீழே தரப்படுகின்றது.

A	வினைத்திறனான முகாமைத்துவம்	B	தொழில் பாதுகாப்பு
C	சமூகத்துக்கான சேவை	D	வெளிப்படைத்தன்மை
E	பாதுகாப்பான உற்பத்திப் பொருட்கள்	F	சுகாதார வசதிகள்
G	கழிவுப் பொருள் முகாமைத்துவம்	H	வேலைவாய்ப்பை வழங்குதல்
I	சமத்துவம்		

ஊழியர்களுடன் தொடர்புடைய சமூகப் பொறுப்புக்களை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

1. A, D, F 2. B, E, H 3. C, F. G 4. A, D, I 5. B, F, I

02. வணிக வங்கிகளில் அக்கறை செலுத்தும் பிரிவினர்களும், வணிகங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சமூகப் பொறுப்புக்கள் சிலவும் கீழே தரப்பட்டுள்ளன.

பிரிவினர்	சமூகப் பொறுப்புக்கள்
A. முதலீட்டாளர்கள்	E. சூழலைப் பாதுகாத்தல்.
B. ஊழியர்கள்	F. நியாயமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளல்.
C. நுகர்வோர்	G. தொழிற் பாதுகாப்பு
D. சமூகம்	H. நியமத்திற்கு ஏற்ப பொருள் வழங்கல்

மேற்காட்டிய A,B,C,D எனும் பிரிவினர்களுக்கு வணிகங்களை ஒழுங்குமுறையாக சரியாக காட்டும் விடைத் தொகுதி எது?

1) F,E,H,G 2) F,G,H,E 3)F,H,E,G 4) G,H,E,F 5) H,G,F,E

03. பரிவர்த்தனை நிகழ்வதற்கு அடிப்படையாக அமைந்த நிபந்தனையில் ஒன்று?
1. பண்டத்தை கொண்டு பண்டத்தை பரிவர்த்தனை செய்தல்
2. பணத்தை கொண்டு பணத்தை பரிவர்த்தனை செய்தல்
3. மறு கட்சியினருடன் கொடுக்கல் வாங்கல் செய்ய விரும்ப வேண்டும்
4. மறுக்கும் சுதந்திரம் வழங்கப்படல்
5. பணத்தை கொண்டு பண்டத்தை பரிமாற்றம் செய்தல்

04. தற்கால வணிக செயற்பாடுகளில் சேவைத் துறையின் துரித வளர்ச்சிக்கு காரணமாக அமையாதது?
1. வருமான மிகை காரணமாக பொழுதுபோக்கு, சுற்றுலாத்துறை வளர்ச்சி,
2. தகவல் தொழிநுட்ப விருத்தியினால் தொழிநுட்ப சேவைகளின் வளர்ச்சி
3. நலமான நீடித்த ஆயுளில் மக்களுக்கு ஆர்வம் அதிகரித்து சுகாதார சேவை வளர்ச்சி
4. வெளிநாட்டு முதலீட்டை கவர்வதற்காக தொடர்பாடல் வசதிகள் மேம்படுத்தப்படல்
5. வணிக வங்கிகளின் கடனாக்கம் அதிகரித்தல் காரணமாக பொருளாதார விருத்தி.

05. பல் வகைப்பட்ட பிரிவுகளுக்குறிய வணிகக் கருமங்கள் சில கீழே தரப்பட்டடுள்ளன. இவற்றுள் கைத்தொழில் பிரிவுக்குரிய வணிக் கருமத்தைக் குறிக்கும் விடைகளைத் தெரிவு செய்க.
1. ஏற்றுமதி, இறக்குமதி, வியாபாரம்.
2. தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து
3. மீன் பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு
4. சுரங்கமறுத்தலும் கல்லுடைத்தலும்
5. பால், முட்டை, இறைச்சி உற்பத்தி

06. பின்வருவனவற்றுள் எது ஒரு வணிகத்தின் நுகர்வோர் சார் பொறுப்பு அன்று?
1. தன்னைத் தானே பாதுகாத்தல்
2. தகவல்களை அறிந்திருத்தல்
3. தான் விரும்புவதைத் தெரிவு செய்தல்
4. இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளுதல்
5. நுகர்வோர் உரிமைகளை உறுதிப்படுத்துதல்

07. வணிக ஒழுக்கம் எனப்படுவது
1. நேர்மையானதும் நியாயமானதுமான போட்டி
2. மனித உரிமைகளைப் பாதுகாத்தல்
3. ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்
4. சூழலைப் பாதுகாத்தல்
5. சமூக நலனை உயர்த்துதல்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

08. வணிக விழுமியங்களும், வணிகத்தின் சமூகப் பொறுப்புகளும் உள்ளடங்கிய சில கூற்றுகள் பின்வருமாறு

A - தொழில் பாதுகாப்பை ஊறுதிப்படுத்தல்

B - நியாயமாகவும், நேர்மையாகவும் போட்டியிடல்

C - நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை உறுதிப்படுத்தல்

D - பிறருக்கு தீங்கு ஏற்பக்கூடிய வகையில் செயற்படாதிருத்தல். மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் வணிக விழுமியங்களுக்கு மட்டும் உரிய கூற்றுக்களைத் தெரிக.

1. A. B 2. B. C 3. C. D 4. A. C 5. B. D

09. *சூழல் முகாமைத்துவமுறைமை தொடர்பாக அளிக்கப்பட்டுள்ள நியமம் பின்வருவனவற்றுள் எது?*

1. ISO 9001
2. ISO 9002
3. ISO 9003
4. ISO 14001
5. ISO 14031

10. *இலங்கையில் சூழல் விவகாரங்கள் தொடர்பில் செயற்படுவதற்கான பிரதான அதிகாரத்தைக் கொண்டுள்ள நிலையம் எது?*

_ _

11. *ஒரு சமுதாயத்தின் நலனில் வணிகங்களின் அக்கறையானது _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ என அழைக்கப்படும்.*

12. *தரமுறைமைகளுக்கான சர்வதேச நியமம் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ என அழைக்கப்படுவதுடன் சூழல் பாதுகாப்புக்கான சர்வதேச நியமம் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ என அழைக்கப்படும்.*

13. *நல்லதைச் செய் மற்றும் கூடாததைச் செய்யாதே என்பதனால் கருதப்படுவது _ _ _ _ _ _ _ _ _ _ _ ஆகும்.*

14. *சூழலை மாசுப்படுத்தாது வணிகத்தை மேற்கொள்ளுதல் வணிகமொன்றினது _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _இன் ஒரு பகுதியாகும்.*

15. *சூழல் மாசடைதலை இழிவளவாக்குதல் அல்லது தவிர்த்தல் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு வழங்கும் பெயர் யாது?*

_ _

16. *வணிகமொன்றிற்கான ஒழுக்கங்கள் பிரசுரிக்கப்படும்போது அவை _ _ _ _ _ _ _ என அழைக்கப்படும்.*

17. அகச் சூழல் பகுப்பாய்வின் போது செயற்திறன் கொண்ட வெற்றிகரமான தலைமைத்துவமானது வணிகமொன்றின் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ ஆக இருப்பதுடன் திறமையற்ற ஊழியர்கள் இல்லாமல் இருப்பதும் வணிகமொன்றின் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _. ஆகும்.

18. போட்டியாளர்களும் விநியோகஸ்தர்களும் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ சூழல் காரணிகளாக இருப்பதுடன் உரிமையாளர்களும், ஊழியர்களும் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ காரணிகளுக்கு உரித்துடையவர்களாவர்.

19. நுகர்வோனின் சுவை, வடிவம், கேள்வி மாற்றம் காரணமாக வணிகத்திற்கு _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ ஏற்படும்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

20. மின்சாரம், கழிவகற்றல், முகாமைத்துவம், வியாபாரம், போக்குவரத்துச் சேவை என்பன வணிகத்தின் தன்மையில் _______________ பிரிவில் உள்ளடக்கப்படும்.

21. தகவல் முறையினைப் பேணுதல், புதிய தகவல்களை உருவாக்குதல், இற்றைப்படுத்தல் என்பன _______________ வணிகக் கருமத்தில் உள்ளடக்கப்படும்.

22. வணிகத்தில் நேர் மதிப்பீடும் நேரான முறைமை நடத்தை ஒழுக்கம் காணப்படாமை _______________ சூழல் காரணியின் _______________ ஆகும்.

23. வழங்குனர் வணிகத்திற்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய சந்தர்பம் 4 தருக.

I. ____

II. ____

III. ____

IV. ____

24. பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்கள் பங்களிப்பு செய்யக்கூடிய நான்கு முறைகளைக் குறிப்பிடுக.

I. ____

II. ____

III. ____

IV. ____

25. சில வணிக நிறுவனங்கள் தமது ஒழுக்கக் கோவையை அச்சிட்டு வெளியிடுகின்றன. இந்த ஒழுக்க கோவைகளால் பாதுகாக்கப்படும் நான்கு பகுதியினரைப் பெயரிடுக.

I. ____________________________

II. ____________________________

III. ____________________________

IV. ____________________________

கட்டமைப்பு கட்டுரை வினாக்கள்

01. மனித தேவை, விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு வணிகமானது இன்றியமையாததாகும். இக் கூற்றுடன் நீர் இணங்குகின்றீர்களா ? உமது விடைக்கான காரணங்களை விளக்குக.

02. தேவை, விருப்பம் எனும் எண்ணக்கருக்களை உதாரணங்கள் மூலம் விளக்குக.

03. சாந்தனின் தாய் துணி துவைக்கும் சவர்க்கரம் ஒன்றை கொள்வனவு செய்தார். இது எவ்வகையான நுகர்வுப் பண்டமாகும்? இதன் பிரதான பண்புகள் யாவை ?

04. மிகை உற்பத்தியால் பண்டமாற்று முறை தோன்றியது. அதிலிருந்து இன்று வரையான வணிக வளர்ச்சிக் கட்டங்களை பட்டியல் படுத்துக.

05. தொழிநுட்பச்சூழலானது வணிகத்தின்மீது ஏற்படுத்தக்கூடிய சாதக, பாதக தாக்கங்கள் 2வீதம் தருக.

06. வணிகச் சூழலின் பிரதான வகைகளை பாய்ச்சல் கோட்டுப் படம் மூலம் விளக்குக.

07. இயற்கைச் சூழலின் நிலைத்திருப்பதற்கான பிரதான ஒரு காரணி சமூக, கலாசார சூழல் ஆகும். இக் கூற்றை உதாரணங்கள் மூலம் விளக்குக.

08. பசுமை உற்பத்தி என்பதனால் கருதப்படுவது யாது? உதாரணங்கள் மூலம் விளக்குக.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

09. வணிகர் ஒருவரான விஸ்வம் தகனது வணிகம் தொடர்பான வணிக ஒழுக்கக் கோவை ஒன்றை கட்டியெழுப்பத் தீர்மானித்தார். இதன் பொது கவனிக்க வேண்டிய 2 காரணிகளை உதாரணங்கள் மூலம் விளக்குக.

10. வணிகத்தின் சமூகப் பெறுப்பு என்பதனால் கருதப்படுவது யாது ? என்பதை அறிமுகப்படுத்தி மாணவர் என்ற வகையில் உங்களால் நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்புக்கள் 2 ஐ விளக்குக

11. "சமுதாயம், சூழல் என்பவற்றின் மீதான வணிகங்களின் சமூகப் பொறுப்பென்பது இன்று விமர்சனத்திற்குரிய விடயமாக மாறி வருகின்றது" விளக்குக.

12. "வணிகத்தின் சமூகப் பொறுப்புகள்" தொடர்பாகப் பிலிப்பைன்ஸினால் பிரகடனப்படுத்தப்பட்ட தேசிய வரைவிலக்கணம் கீழே தரப்பட்டுள்ளது. "வணிகத்தின் சமூகப் பொறுப்பென்பது மீண்டும் வணிகத்தைச் சமூகத்துக்கு வழங்குவதென்பதாகும்." இக்கூற்றின் கருத்தை விவரிக்குக.

13. பின்வரும் எண்ணக்கருக்களை வணிக ஒழுக்கத்துடன் தொடர்புபட்ட வகையில் விளக்குக.
    a. உண்மையானவைகளை எடுத்துக் கூறுதல்
    b. மற்றவர்களுக்கு தீங்கு செய்யாதிருத்தல்.

14. வணிகத்தின் சமூகப் பொறுப்பு தொடர்பான தரங்கள் எவை?

15. வணிகத்தின் ஒழுக்கக் கோவை என்பதனால் கருதப்படுவது யாது? அதன் நோக்கங்கள் எவை?

16. வணிகம் ஒழுக்கக் கோவையினைக் கட்டியெழுப்பும் போது கருத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் எவை?

17. பின்வரும் தரப்பினர் மீதான சமூகப் பொறுப்புக்களை தனித்தனியாகக் குறிப்பிடுக.
    i. நுகர்வோர்
    ii. முதலீட்டாளர்
    iii. சமூகமும் சூழலும்
    iv. ஊழியர்கள்

18. வணிகத்தின் சமூகப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றமையை அளவிடுவதற்கு வணிகத்துக்கான ஏற்பாடுகள் யாவை?

19. வணிக ஒழுக்கத்தை சிறப்பாக பேணுவதன் மூலம் வணிகம் அடையக் கூடிய நன்மைகள் யாவை?

20. வணிகத் தொழிற்பாடுகளின் அடிப்படையில் உயர்தொழில் ஒழுக்கங்கள் எவ்வாறு அங்கீகரிக்கப்படுகின்றது.

21. வணிக ஒழுக்கங்கள் மீறப்படும் சந்தரப்பங்கள் யாவை?

22. வணிக விழுமியம் (வணிக ஒழுக்கநெறி) - வணிகத்தின் சமூகப் பொறுப்பு வேறுபடுத்துக.

23. வணிக நிறுவனங்கள் வணிக விழுமியங்களை ஏன் பின்பற்றவேண்டும் என்பதனை உதாரணத்துடன் விளக்குக.

24. வணிகத்தில் ஏனையோருக்கு தீங்கு விளைவிப்போர் யாவர்?

25. சில வணிகங்கள் பங்குதாரர் என்ற எண்ணக்கருவிலிருந்து அக்கறையுடைய தரப்பினர் என்ற எண்ணக்கருவுக்கு தமது பாதையை ஏன் மாற்றியுள்ளனர் என விளக்குக.

5.0 பல்வேறு வணிக அமைப்பு வகைகளையும் அவற்றை முறையாக ஆரம்பித்து நடத்திச் செல்வதற்கான தேவைப்பாட்டினையும் உறுதிப்படுத்துவார்.

பயிற்சிகள்

01. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி தொடர்பாக மிகச் சரியான கூற்று எது?
   1. இழிவு ஒப்பப்பண தேவைப்பாடு இங்கு பொருத்தமற்றது.
   2. ஆகக் குறைந்தது இரண்டு இயக்குனர்களாவது கட்டாயமாகக் காணப்படுதல் வேண்டும்.
   3. கம்பனிப் பதிவாளருக்கு நிதிக்கூற்றுக்களையும், வருடாந்த அறிக்கையையும் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதில்லை.
   4. பங்குகள் கைமாற்றப்பட முடியாதவை.
   5. தொகுதிக்கடன்களை வழங்குவது சாத்தியமற்றது.

02. வணிக அமைப்புக்களும் அவற்றின் பண்புகளும் கீழே தரப்பட்டுள்ளன.

வணிக அமைப்பு	**பண்புகள்**
A- கூட்டுறவு	1. வணிக முயற்சியொன்று இருத்தல்
B- தனியுடைமை	2. இடருக்குத் தனியாக முகம் கொடுத்தல்
C- கம்பனி	3. சுயமாக இணைந்த தனிநபர் அமைப்பு
D- பங்குடமை	4. நீடித்த வாழ்வு

ஒவ்வொரு வணிக அமைப்புக்களுக்குமுரிய பண்புகளை சரியாக ஒழுங்குபடுத்தியுள்ள தொகுதியினைத் தெரிவு செய்க.

1. A - 1, B - 3, C - 4, D - 2
2. A - 4, B - 2, C - 3, D - 1
3. A - 3, B - 2, C - 4, D - 1
4. A - 3, B - 2, C - 1, D - 4
4. A - 4, B - 2, C - 1, D – 3

03. பங்குடமை தொடர்பாக மிகச் சரியான கூற்று எது?
   1. பங்குடமை கட்டளைச்சட்டம் 1890 இன் கீழ் பங்குடைமையை பதிவு செய்தல் கட்டாயமானது.
   2. பெயரளவுப் பங்காளரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
   3. ஒரு வரையறுக்கப்பட்ட பங்குடமையில் உள்ள எல்லாப் பங்காளர்களினதும் பொறுப்பானது வரையறுக்கப்பட்டது.
   4. இலாபம் எப்போதும் சமனாக பிரிக்கப்படுதல் வேண்டும்.
   5. பங்குடைமை ஒப்பந்தமானது எப்போதும் எழுத்தில் இருத்தல் வேண்டும்.

04. 1890ஆம் ஆண்டின் பங்குடைமைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவிற்கிணங்க சரியான கூற்றைத் தெரிவு செய்க.
   1. பங்காளர்களால் ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தின் விகிதாசார அடிப்படையில் இலாபம் பகிர்வு செய்யப்படல் வேண்டும்
   2. பங்காளர்கள், தாம் ஈடுபடுத்திய மூலதனத்துக்கு வட்டியைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர்கள்
   3. ஒவ்வொரு பங்காளரும் முகாமைத்துவத்தில் அங்கம் வகிப்பதற்கு உரிமையுடையவர்கள்
   4. சகல பங்காளர்களும் வணிகத்தில் செயற்படுவதற்காக ஊதியம் பெற உரித்துடையவர்கள்
   5. பெரும்பான்மையானோரின் சம்மதத்துடன் புதிய பங்காளர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்

05. இலங்கையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுக்கான விண்ணப்பத்தினை எங்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
   1. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்
   2. இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

3. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
4. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
5. இலங்கைக் கூட்டுறவு முகாமை நிலையம்.

06. தனியுடையுடன் ஒப்பிடும் பொழுது பங்குடையின் சிறப்பான ஓர் அனுகூலம்
1. விரைவாகத் தீர்மானமெடுக்கக்கூடியதாக இருத்தல்
2. வரையறையற்ற பொறுப்பு
3. சட்டரீதியான தனி அலகொன்றாக இல்லாதிருத்தல்
4. கணக்குகளை பிரசுரித்தல் கட்டாயமானதன்று
5. அபாயம் பகிரப்படுதல்

07. தனியார் மயமாக்கல் என்பதாற் கருதப்படுவது.
1. பொதுக்கூட்டுத்தாபனங்களைத் தனியார் கம்பனிகளுக்கு விற்றல்.
2. அரசாங்கத் திணைக்களங்களைத் தனியார் கம்பனிகளுக்கு விற்றல்.
3. அரச கம்பனிகளைத் தனியார் கம்பனிகளுக்கு விற்றல்.
4. பண்டங்கள், சேவைகள் என்பவற்றின் உற்பத்தியைப் பொதுத்துறையிலிருந்து தனியார் துறைக்கு மாற்றுதல்.
5. அரசாங்க ஊழியர்களைத் தனியார் துறை நிறுவகங்களில் அமர்த்துதல்.

08. மூலதனத்திற்குப் பங்களிப்புச் செய்யாது ஆனால் ஆண்டுக்குரிய இலாபங்களின் அடிப்படையில் வட்டிக்குக் கடன் கொடுக்கும் பங்காளருக்கு வழங்கும் பெயர் யாது?
1. பெயரளவு பங்காளர்
2. இயங்கும் பங்காளர்
3. அமைதிப்பங்காளர்
4. பேலிப்பங்காளர்
5. உறங்கும் பங்காளர்

09. கூட்டுறவுச் சங்க ஊழியர்களுடன் சம்பந்தப்பட்ட வாதங்களைக் கையாளும் நிறுவனம்.
1. இலங்கைத் தேசியக் கூட்டுறவுச் சபை
2. கூட்டுறவுச் சேவைகள் ஆணைக்குழு
3. கூட்டுறவு முகாமை நிலையம்
4. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
5. கூட்டுறவு அபிவிருத்தித் தேசிய நிறுவகம்.

10. வரையறுத்த பொறுப்பு மூலம் பெறப்படும் பெறுபேறு
1. உடமையாளர்களது இடர் அவர்களால் முதலீடு செய்யபட்ட பணம் மட்டுமல்ல அவர்களது சொந்த சொத்துக்களும் கூட என்பதாகும்.
2. வணிகத்தில் முதலீடு செய்யப்பட்ட பணத்தினது இடருக்கு அப்பால் உடமையாளர்கள் வெளிப்படுத்த மாட்டார்கள் என்பதாகும்.
3. வணிகத்தில் முதலீடு செய்தல் இடரற்றது என்பதாகும்.
4. வணிகத்தைக் கட்டுப்படுத்துவதில் உடமையாளர்கள் செல்வாக்குச் செலுத்த முடியாது என்பதாகும்.
5. முதலீட்டின் மீதான திரும்பல் (உழைப்பு) உத்தரவாதமுடையது என்பதாகும்.

11. ஒரு அங்கீகார வணிகமென்பது
1. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வணிகங்களினது கூட்டு முயற்சியாகும்.
2. கம்பனியொன்று வேறொரு கம்பனியால் கையகப்படுத்தல் என்பதாகும்.
3. கம்பனியொன்று பல்தேசிய கம்பனியாக மாற்றப்படுதல் என்பதாகும்.
4. தற்போது காணப்படும் வணிகமொன்றின் பெயர், இலட்சினை வியபார முறைமை போன்வற்றைப் பயன்படுத்துதல் என்பதாகும்.
5. அரசுக்குச் சொந்தமானதும் அதனால் கட்டுப்படுத்தப்படுவதுமாகும்.

12. பங்குடமையுடன் தொடர்புபட்டவகையில் **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.
    1. ஆகக் குறைந்த பங்காளர் எண்ணிக்கை இரண்டாகக் காணப்படுவதுடன் ஆகக்கூடிய பங்காளர் எண்ணிக்கை 20 ஆகக் காணப்படுவதல்.
    2. குறிப்பாக ஒரு வணிகத்த நடத்த பங்காளர்கள் உடன்படுதல் வேண்டும்.
    3. ஒவ்வொரு பங்காளரும் தனக்காகவும், பிறருக்காகவும் முகவராகவும் முதல்வராகவும் காணப்படுவர்.
    4. எழுத்து வடிவிலான உடன்படிக்கை இல்லாமல் பங்குடமை ஒன்றை கொண்டு நடத்துவது சாத்தியமில்லை.
    5. பங்குடமையில் சட்டரீதியான ஆளுமை காணப்படவில்லை.

13. பங்குகள், தொகுதிக்கடன் பத்திரங்களை வாங்கச் செய்வதற்கு பொதுமக்களை அழைப்பதற்காக வரையறுத்த பொதுக்கம்பனியால் வெளியிடப்படும் ஆவணம்
    1. அமைப்பு அகவிதி 2. அமைப்பு புறவிதி 3. நியதிச் சட்டகப் பிரகடனப்படுத்தல்.
    3. பிரதிபயன் 3. முன்விபரணம்

14. வரையறுத்த கம்பனிகளுடன் தொடர்புடைய சரியான கூற்றுக்களைத் தெரிவு செய்க.
    1. வரையறுத்த தனியார் கம்பனியில் ஆகக் குறைந்த பங்குதாரர்களின் எண்ணிக்கை ஒன்று என்பதுடன் ஆகக் கூடிய எண்ணிக்கை வரையறையற்றதாகும்.
    2. வேறோர் நாட்டில் கூட்டிணைக்கப்பட்டு இலங்கையில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு கம்பனி கரைகடந்த கம்பனியாகும்.
    3. வரையறுத்த தனியார் கம்பனியில் ஆகக் குறைந்த பணிப்பாளர் எண்ணிக்கை ஒன்று என்பதுடன் ஆகக் கூடி எண்ணிக்கை ஏழு ஆகும்.
    4. வரையறுத்த தனியார் கம்பனி மட்டுமே கூட்டிணைப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னர் வணிக நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும்.
    5. வரையறுத்த பொதுக்கம்பனியில் ஆகக் குறைந்த பணிப்பாளர் எண்ணிக்கை இரண்டு என்பதுடன் ஆகக் கூடிய எண்ணிக்கை வரையறையற்றதாகும்.

15. பின்வருவன வணிக நிறுவனங்களையும் அவற்றுடன் தொடர்பான காரணிகளையும் தருகின்றது.

A	பொதுக்கூட்டுத்தாபணங்கள்	1	ஒவ்வொரு அங்கத்தவரும் அவர்கள் கொண்டுள்ள பங்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் வாக்குகளைப் பெற்றுக்கொள்வர்
B	பங்குடமைகள்	2	அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாடு
C	கூட்டுறவு அமைப்புக்கள்	3	பாராளுமன்ற பொது அல்லது விசேட சட்டதினால் தயாரிக்கப்பட்டது
D	பொது வரையறுத்த கம்பனிகள்	4	ஒரு அங்கத்தவர் ஒரு வாக்கை மட்டும் பெற்றுக்கொள்வார்
E	அரச திணைக்களங்ள்	5	1918ம் ஆண்டு வணிக பெயர் பதிவுச் சட்டதின் தாக்கம்.

சரியான இணைப்பு

1.) A2, B5 C1, D3, E4 2.) A3, B4, C1, D5, E2 3.) A2, B4, C5, D1, E3
4.) A3, B5, C4, D1, E2 5.) A3, B5, C1, D4, E2

16. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

	தனியுடமை	பங்குடமை	வரையறுத்த தனியார் கம்பனி	வரையறுத்த பொதுக்கம்பனி
உறுப்பினர்கள் எண்ணிக்கை	....	....	....	....
பொறுப்பு	....	....	....	....
சட்ட ஆளுமை	....	....	....	....

17. 1980 ஆம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவில் குறிப்பிடப்படுவது …………………… ……………………………………… ஆகும்

18. எல்லா வகையான கம்பனிகளிலும் …………………………………………….. ஒருவர் கடடாயம் காணப்பட வேண்டும்.

19. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டப்படி மூன்று பிரதான கம்பனி வகைகளைப் பெயரிடுக.

....

20. அந்நிய நாடு ஒன்றிலே பதிவு செய்யப்பட்டு இலங்கையில் வணிகச் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் ஒரு கம்பனிக்கு வழங்கும் பெயர்

.... ஆகும்.

21. அங்கீகார வணிகமொன்றை ஆரம்பிக்கும் இரு அடிப்படையான முறைகளை குறிப்பிடுக.

1. ....

2. ....

22. தனிநபர் ஒருவருக்கோ தனிப்பட்டவர்களின் தொகுதியொன்றுக்கோ உடைமை சொந்தமாக உள்ள வணிக நிறுவகங்கள் .... என அழைக்கப்படும்.

23. வரையறுத்த கம்பனியொன்றின் சட்ட ஆளுமையானது (Legal Entity) கம்பனிச் சட்டத்தின் மூலமும் ………………………………………………………………………………………. மூலமும் உருவானதாகும்.

24. பங்குடமையொன்றின் வணிக நடவடிக்கைகளில் பங்குபற்றாத மற்றும் பொதுமக்களுக்குத் தெரியாத பங்காளர் ஒருவர்

....அழைக்கப்படுவார்.

25. இலங்கைக்கு வெளியே மட்டும் வணிகத்தை மேற்கொள்வதற்காக கூட்டிணைக்கப்படும் கம்பனி ஒன்றை அழைக்கப் பயன்படும் பதம் யாது?

....

26. இலங்கையின் தேசிய மட்டத்திலான கூட்டுறவு அமைப்புக்கு வழங்கப்பட்டுள்ள பெயர் யாது? ....

27. அதனுடைய தாய் நிறுவனத்திலிருந்து சட்டரீதியாக தனிப்பட்ட மற்றும் வேறுபட்ட வகையில் காணக்கூடியதாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வணிக நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து உருவாக்கும் ஒரு புதிய வணிக அலகு

....என அழைக்கப்படும்.

28. அங்கீகாரம் வழங்குபவரின் வியாபாரப் பெயரினை பயன்படுத்துவதன் மூலம் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், விநியோகிப்பதற்கும் உரிமை வழங்கப்படும் அங்கீகார வணிகம்

....என அழைக்கப்படும்.

29. பங்குமூலதனமின்றி ஆரம்பிக்கப்படும் ஒரு கம்பனி ....என அழைக்கப்படுவதுடன் பொதுகமக்களுக்கு பங்குகள் ஏனைய பிணைப்பத்திரங்களை விற்பனை செய்யத் தடை செய்யப்பட்டுள்ள ஒரு கம்பனி

....என அழைக்கப்படும்.

30. பங்குடமையை உருவாக்குவதில் காணப்படும் நான்கு முக்கிய சிறப்பியல்புகள்.

1. .... 2. ....

3. .... 4. ....

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

கட்டமைப்பு கட்டுரை வினாக்கள்

1. அங்கீகாரவணிகம் எனப்படுவது யாது? அங்கீகாரக் கம்பனி ஒன்றைக் கொள்வனவு செய்தலின் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

2. நிர்மலி, திலமனி எனும் இரு சகோதரியர் தேயிலையைப் பொதி செய்து ஏற்றுமதி செய்வதற்காக வரையறுத்த பொறுப்புக் கம்பனியொன்றை ஆரம்பிக்க தீர்மானித்தனர் அத்துடன் பங்கு மூலதனத்தை தாமே வழங்கவும் அவர்கள் தீர்மானித்தனர்.
   அ. எந்த வகையான வரையறுத்த பொறுப்புக் கம்பனியை அவர்கள் தெரிவு செய்தல் வேண்டும்?
   ஆ. தமது கம்பனிக்கான பெயரைத் தெரிவு செய்தல் தொடர்பில் அவர்கள் கருத்திற்கொள்ள வேண்டிய அம்சங்கள் எவை?

   இ. கம்பனியை ஆரம்பிப்பதற்கு அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆவணத்தின் பெயரைத் தருக.
3. அ. ஒரு கம்பனியின் "பங்குரிமையாளர்" எனப்படுவோர் யார்? ஆ. வரையறுத்த பொதுக்கம்பனியொன்று மூலதனத்தைப் பெறும் இரு பிரதான மூலகங்கள் யாவை?
4. தனியார்துறை நிறுவனங்களின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கென இலங்கை அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்டுள்ள இரண்டு (02) பிரதான வகிப்பாகங்களைக் குறிப்பிட்டு. சுருக்கமாக விளக்குக.
5. (அ) குறிப்பிட்ட உற்பத்திப்பொருளொன்று வியாபாரியிடம் காணப்படுகின்றபோதும் அவர் அதனை விற்பனை செய்வதற்கு மறுப்பாராயின் நுகர்வோர் முறைப்பாடு செய்ய வேண்டிய நிறுவனம் எது?
   (ஆ)உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இலங்கைத் தரச் சான்றிதழினால் கிடைக்கும் அனுகூலங்களைத் தனித்தனியே தருக.

6. **பின்வரும் தகவலைப் பயன்படுத்தி (1) ஆம் (2)ஆம் (3) அம் வினாக்களுக்கு விடை எழுதுக**.

   1990 ஆம் ஆண்டில் மேரி என்பவர் சொந்தமாக ஆடை தயாரிக்கும் வணிகமொன்றைத் திருகோணமலையில் ஆரம்பித்தார். இவ்வணிகத்துக்காக அவர் நான்கு தையல் தெரிந்த பெண்களை வேலைக்கமர்த்தினார். வசதியான வாடிக்கையாளர்களுக்கு ஆடைகளையும் தயாரித்தது. சில வருடங்களின் பின்னர் நவநாகரிக வடிவமைப்பாளரான ஜெனற்றுடன் சேர்ந்து பங்குடைமை ஒன்றை மேரி தாபித்தார். பங்குடைமையானது மிகவும் உயர்ந்த தரமுடைய ஆடைகளைத் தயாரித்தது. தயாரித்த ஆடைகள்யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் காணப்படும் நவநாகரிக ஆடை விற்கம் வணிகங்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. இவர்கள் பங்குடைமை உடன்படிக்கை ஒன்றை உருவாக்கியிருந்தார்கள். இதன் பிரகாரம் மேரி வியாபாரம் தொடர்பாக (உ+ம் வாங்கல், விற்றல்) அக்கறை செலுத்தியதுடன் நிறுவனக் கணக்குகளையும் கையாண்டார். ஜெனற் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி தொடர்பாக அக்கறை செலுத்தியதுடன் 2 000 ஆம் ஆண்டில் இருப்பதாக அதிகரிப்பட்டிருந்த ஊழியர்களையும் முகாமை செய்தார். மேரியின் தொடர்ச்சியான நீண்டகால நோயின் காரணமாக பங்குடைமை உடன்படிக்கையில்திருத்தம் செய்யப்பட்டது. மேரி தனது பணத்தை வணிகத்திலிருந்து மீளப்பெற்றுக்கொண்டதுடன்ஒரு உறங்கும் பங்காளராக இருந்தார்.2010 அம் ஆண்டில் ஜெனற் இளைப்பாறியதுடன் இது வரையறுத்த தாரகன் (தனியார்) கம்பனி என்ற ஒரு தனியார் கம்பனியாக உருவாக்கப்பட்டது. இதன் ஆரம்பப் பங்குதாரர்கள் மேரி மற்றும் ஜெனற் ஆகியோரின் உறவினரத்களும் நண்பர்களும் ஆவர். இன் இந்தக் கம்பனியானது ஆடைக் கைத்தொழிலில் மிகப் பிரபல்யமான கம்பனியாகும்.

   1. (அ) இவ்வணிக நிறுவனத்தின் முதலாவது வகை எது? வணிகத்தை ஆரம்பிப்பதற்காக இவ்வகை வணிகத்தை அவர் ஏன் தெரிவு செய்தார்?
   (ஆ) மேரி மற்றும் ஜெனற் ஆகியோரிடையே பங்குடைமை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டதன் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் யாவை?

2. பங்குடைமையானது ஒரு வரையத்த தனியார் கம்பனியாக மாற்றியமைக்கப்படுவதன் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் யாவை?
3. இவ்வணிகம் தொடர்பில் மேலும் விரிவாக்கம் தேவைப்படின் எவ்வகையான வணிக நிறுவனத்தை நீர் விரிவாக்கத்துக்காகச் சிபாரிசு செய்வீர்? அவ்வகையான வணிக நிறுவனத்தின் விசேட தன்மைகளை விளக்குக.

7. தனியுடைமை வணிகமொன்றுடன் ஒப்பிடும் பொழுது பங்குடைமையொன்றின் மூன்று அனுகூலங்களையும் மூன்று பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.
8. வரையறுத்த பொதுக் கம்பனிகள் வணிகங்களின் விரிவாக்கத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன? என ஆராய்க.
9. அரசாங்கமொன்று கைத்தொழில்கள் சிலவற்றைப் பொது உடைமையின் கீழ் வைத்திருக்கத் தீர்மானிப்பது ஏன்?
10. வரையறுத்த தனியார் கம்பனியொன்றுடன் ஒப்பிடும் பொழுது வரையறுத்த பொதுக்கம்பனியொன்றின் பிரதிகூலங்கள் யாவையென விளக்குக.
11. வரையறுத்த கம்பனி ஒன்றின் சட்ட ஆளுமை என்ற எண்ணக்கருவின் கருத்தை விளக்குக.
12. ஒரு வரையறுத்த கம்பனியின் ஏனைய இரண்டு சட்டரீதியான சிறப்பியல்புகளை விளக்குக.
13. அங்கீகாரம் வழங்கியவர், அங்கீகாரம் பெற்றவர் ஆகியோருக்கு அங்கீகார வணிகத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகளைத் தனித்தனியே விளக்குக.
14. பங்குடைமை ஒன்றுக்கும் தனியுடைமை ஒன்றுக்கும் இடையிலான ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் தனித்தனியாக விளக்குக.
15. பட்டியற்படுத்தப்பட்ட கம்பனி என்பதால் கருதப்படுவது யாது?
16. பட்டியற்படுத்தப்பட்ட பொதுக்கம்பனியையும் பட்டியற்படுத்தப்படாத பொதுக்கம்பனியையும் அவற்றின் பெயர்கள் மூலம் எவ்வாறு அடையாளப்படுத்த முடியும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.
17. மனோ, தயா ஆகியோர் பங்குடைமையில் ஈடுபட்டுள்ளனர். இவர்களிடையே எழுத்துவடிவிலான பங்குடைமை உடன்படிக்கை ஒன்று காணப்படுகின்றது. அவர்கள் இருவரும் உடன்பட்டு நிரோஷ் என்பவரை தமது பங்குடைமையில் சேர்த்துக்கொண்டனர். இச்சூழ்நிலையில் பங்குடையில் ஏற்படக்கூடிய மாற்றங்களை விளக்குக.
18. அங்கீகார வணிகங்களின் பிரதான வகைகளைக் குறிப்பிட்டு அவற்றிக்கு உதாரணங்கள் தருக.
19. ''கம்பனி'' என்ற பதத்தைச் சுருக்கமாக விளக்குக.
20. கம்பனியொன்றின் நிலையானதும் தொடர்ச்சியானதுமான தன்மை என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
21. பொது வரையறுத்த கம்பனி, தனியார் வரையறுத்த கம்பனி போன்ற இரு கம்பனிகள் காணப்படுகின்றன. ''பொது'' மற்றும் ''தனியார்'' பதங்களின் மூலம் கருதப்படுவது யாது?
22.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

- ❖ தனது தந்தையாரினால் நீண்டகாலமாக நடத்தி வரப்பட்ட மரபுரீதியான எணவு வணிகமொன்றை ரமணி என்பவள் கையேற்றுக்கொண்டாள். அவ்வணிகத்துக்குச் சில நவீனமயப்படுத்தல்களை அவள் அறிமுகப்படுத்தியதுடன் பழச்சாறை விற்பனை செய்வதற்காக தனித்த ஒரு பிரிவையும் உருவாக்கினாள். அவளது விற்பனையும் இலாபமும் அதிகித்தது. ஆனால் மேற்பார்வை செய்வது தொடர்பாக ரமணியின் அக்கறையற்ற நடவடிக்கை காரணமாக அவ்வணிகமானது படிப்படியாகக்கீழ்நோக்கிச் சென்றது. இதன் விளைவாக முகாமை'' மற்றும் நிதி தொடர்பாகப் பிரச்சினைகள் தோன்றியதுடன் முடிவில் அவள் கடன் தீர்க்க முடியாத நிலைக்குத் தள்ளப்படாள்.

  01. ரமணியின் வணிகத்தினது வெளியீட்டை பொருட்களாகவா, சேவைகளாகவா கருத முடியும்?

  02. உமது விடையின் பிரகாரம், இப்பொருட்கள் அல்லது சேவைகளில் என்ன விசேடத்துவத்தை நீர் காண்கின்றீர்? விளக்குக.

  03. இங்கு தரப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரமணியினுடைய வணிக நிறுவனம் எவ் வகையானது?

  04. ரமணியின் வணிகத்தை உதாரணமாகக் கொண்டு "வரையறுக்கப்படாத பொறுப்பு" என்பதனால் கருதப்படுவது யாது? என்பதனை விளக்குக.

23.

- ❖ தகுதி வாய்ந்த கணக்காளர்களான ஆதர், பேர்ட்டி, சாள்ஸ் ஆகியோர் கணக்கீட்டு நிறுவனமொன்றை பங்குடமை வணிகமாக ஆரம்பித்தனர். இவர்கள் ஒவ்வொருவரும் கணக்கீட்டுத் துறையில் வத்தியாசமான விசேடத்துவங்களைக் கொண்டிருந்தனர். ஆரம்பத்தில் இவர்கள் சம அளவிலான தொகையை மூலதனமாக ஈடுபடுத்தியிருந்தனர். இவர்களது மேற்பார்வையின் கீழ் ஒரு செயலாளரும் சில எழுதுவினைஞர்களும் கடமையாற்றுகின்றார்கள். இவ்வணிகத்தின் முன்னேற்றமானது சில வருடங்களுக்கு மிகவும் சிறப்பாகக் காணப்பட்டது. துரதிஸ்டவசமாக முரண்பாடு தோன்றியதன் காரணமாக பேர்ட் விலகிக் கொள்வதற்குத் தள்ளப்பட்டனர். ஆனால் வணிகத்தின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் எவ்வாறு பகிர்ந்து கொள்வதென்பதே அவர்களது தற்போதைய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

  01. இச்சம்பவத்தில் குறிப்பிட்டதன்படி பெரும்பாலான பங்குடமைகள் சேவை வழங்கும் வணிகங்களாக ஏன் காணப்படுகின்றன என விளக்குக.

  02. இவ்வாறான தோல்வியைத் தவிர்ப்பதற்கு பங்குடமையின் ஆரம்பத்தில் என்ன செய்திருக்க வேண்டும் என விளக்குக

24. பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக

1. சட்ட ஆளுமை	*2. நட்டப்பொறுப்பு*	*3. பொது*	*4. தனியார்*
5. வரையறுக்கப்பட்ட	*6. கம்பனிகளின் தொடர்ச்சியான தன்மை*		

25. ஏனைய வணிகங்களுடன் ஒப்பிடும் போது கூட்டுறவு வணிகத்தின் பெறுமதிமிக்க அம்சங்கள் எவை?

26. கூட்டுறவு தொடர்பான சட்டம் எது? அச்சட்டத்தின் படி நடைமுறைப்படுத்தப்படும் விதிகள் எவை?

27. 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம், வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்றின் சாதாரண பங்குகளை கொள்வனவு செய்வதன் மூலம் முதலீட்டாளர் ஒருவர் என்ன உரிமைகளைப் பெறுகின்றார்.

28. வரையறுத்த கம்பனி ஒன்றினைப் பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்களுள் அமைப்பு அகவிதி மிகவும் முக்கியமானதாகும். கம்பனி நடவடிக்கைகள் மீது அமைப்பு அகவிதி எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை விளக்குக.

29. அஜித், பிரகதி, செபி ஆகியோர் பங்குடமையொன்றினைக் கொண்டு நடத்துகின்றனர். பின்வரும் விடயங்கள் தொடர்பாக அவர்களுக்கிடையே முரண்பாடு காணப்படுகின்றது.

  1. இலாபநட்ட விகிதம்

  2. ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்துக்கான வட்டி

3. பிரகதியும், செபியும் இயங்கும் பங்காளராகக் காணப்படுவதனால் அவர்கள் சம்பளத்தைக் கோருகின்றனர்
4. அஜித் தன்னால் வழங்கப்பட்ட கடனுக்கான வட்டியைக் கோருகின்றார்.
மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக பங்குடமை உடன்படிக்கையில் எந்தவொரு கருத்துக்களும் காணப்படவில்லை. 1890ம் ஆண்டின் பங்குடமைச் சட்டத்துக்கு இனங்க மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை அவர்கள் எவ்வாறு தீர்த்துக்கொள்ள முடியும் என்பதை தனித்தனியாக விளக்குக.

30. 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் தனியார் கம்பனியொன்றினைப் பதிவு செய்வதற்காக கம்பனிப் பதிவாளரிடம் விண்ணப்பப் பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைக் குறிப்பிடுக.

Note -

தரச்சான்றுகள்

1.	ISO – 9000	Quality management systems – Fundamentals and vocabulary
2.	ISO – 14000	Environmental management systems
3.	ISO – 14001	Environmental management systems – Requirements with guidance for use
4.	ISO – 22000	Food safety management systems – Requirements for any organization in the food chain
5.	ISO – 26000	Guidance on social responsibility
6.	ISO – 50001	Energy management systems – Requirements with guidance for use
6.	ISO – 31000	Risk management – Principles and guidelines
7.	ISO – 27001	Information technology – Security techniques – Information security management systems – Requirements
8.	ISO – 20121	sustainability management systems
9.	OHSAS – 18001	Occupational Health and Safety
10.	SA – 8000	Social Accountability
11.	HACCP	systematic preventive approach to food safety frombiological, chemical, and physical hazards in production processes that can cause the finished product to be unsafe,
11.	GMP சான்றுறுதிப்படுத்தல்	உற்பத்திச் செயற்பாட்டுத்தரத்துக்கான கட்டளை பணியகம் வழங்கும் சான்று
12.	சக்திச் செயற்றின் சுற்றுறை	இலங்கை மின்சாரசபையும் தரக்கட்டளை பணியகமும் இணைந்து வழங்குகின்றனர்.

GMP	Good Manfacture Practice
HACCP	Hazard analysis and critical control points
CRIB	Credit Information Bureau